கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச் சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-ச] பராபவஹு சித்திரைமீ [பகுதி-சு.

உள்ளுறை.

பழந்தமிழ்க்குடிகள்:—பத்திராசிரியர். உசங
வெண்ணெயூர்ச் சடையபிள்ளை யென்கிற புதுவைச்சேதிராயர் கல்வெட்டுக்கள்:— ஸ்ரீமத்-பின்னத்தூர் நாராயணசாமிஐயர் உருக
மகாபாரதச் செய்யுட்பாடாந்தரம்:—ஸ்ரீமத்-சேற்றூர்ச்சுப்பிரமணியக்கவிராயர். உருங
பெரியபுராண அரும்பத விளக்கம்:— ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை உருகூ
கல்லாடம்:— ஸ்ரீமத்-து. அ. கோபிநாத ராவ், M. A. உசாங
'ஆயிரம்' என்பதின் குறிப்பு:- ஸ்ரீமத்-து. அ. கோபிநாத ராவ், M. A. உசாக
இந்து மதம்:—ஸ்ரீமத்-மு. சாம்பசிவநாயனார். உசாச
உயிர்:—ஸ்ரீமத்-சேற்றூர் இராமசாமிக்கவிராயர். உஎங
கொழுந் துன்னூசியுரை விளக்கம்:— ஸ்ரீமத்-அரசஞ்சண்முகம் பிள்ளை. உஅச
தக்கயாகப்பரணிபாடப்பட்ட வரலாறு:—பத்திராசிரியர் உகூங
பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்.—ஸ்ரீமத்-சே. இராஜகோபாலாசாரியர் B. A. உகூஅ
தொல்காப்பியஞ் செய்யுளியல் நச்சினார்க்கினியம்:— ஸ்ரீமத்-ரா. இராகவையங்கார் ககங

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] 1906. [தனிப்பிரதி அணா 8.

T. R. Tawker & Sons,

MOUNT ROAD, MADRAS.

வைரம், பச்சை, கெம்பு முதலிய ரத்தினங்களும், நகைகளும், எங்களிடம் சரசமாய் விலைக்கு தரப்படும். தவிர நூதனமாய் வேண்டிய நகைகள் உத்திரவின்பேரில் செய்யப்படும். எங்களிடம் தயாராயிருக்கும் நகைகளுக்கு அற்புதமான காட்லாக்கு லெட்டரின் பேரில் அனுப்பப்படும். உயர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு வேலைத்திறமாயும் உத்திரவாதமாயும் செய்தனுப்பப்படும். ஒரு முறை பார்த்தால் அனுபோகம் தெரியவரும்.

B. 106 கெடியார கோலுசு சவரன் பொன்னால் செய்தது ரூ 165, 138, 118 வரையில். ஷெ வெள்ளி ரூ 8.



B. 510. பொன் கைகெடியாரம் வைண்டிங் முக்கால் மூடியுடையதும் (லீவர்) தலையில் சாவியுடையதும் சரியான காலங் காட்டுவதுமானது ரூ 140. ஷெ வெள்ளிக் கெடியாரம் ரூ 25 முதல் 60-வரையில்.



B. 107 கெடியார கோலுசு சவரன் பொன் ரூ 170. 8-மாத்துப் பொன் 145. 6-மாத்துப் பொன் ரூ 125. ஷெ வெள்ளிக்கோலுசு ரூ 10.



J. 1053. காசிமாலை. பலவிதமான காதுகள்வைத்த காசிமாலை மாதிரிகள் எங்களிடம் தயாராயிருக்கிறது அதின் விலையும் மாதிரியும் தேவையானவர்களுக்கு மனுவின் பேரில் தெரிவிக்கப்படும். மாதிரி பிளானும் அனுப்பப்படும்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௪] பராபவ ஹு சித்திரைமீ [பகுதி-௬.

பழந்தமிழ்க்குடிகள்.

மிகப்பழைய காலத்தே, இந்தியாவின் வடபாலில், ஆரியர் படிப்படியாகக் குடியேறிப் பரவிவரும்போது, அவர்க்கு முன்னும் பின்னும் வேறுசில சாதியாரும் வடகீழ்நாடுகளிலிருந்து இத்தேயத்திற் குடியேறத்தொடங்கினரென்பது, நவீன சரித்திரவறிஞர் பலரது கொள்கையாக உள்ளது. ஆரியர், தங்குடி யேற்றத்தில், இத்தேசப்பழங்குடியினருடன் பெரும்போர் புரிந்து அவரை அடக்கியாள வேண்டியிருந்ததோடு, தம்மைப்போல வேற்றிடத்திலிருந்து வந்து குடியேறிய சாதியாரோடும் அவ்வாறு எதிர்க்க நேர்ந்தது. இப்பெருங்கருமத்தைச் சிறிதும்சலிப்பின்றித் தொடர்ந்துநடத்தி, முடிவில் அவ்வாரியரே வெற்றிபெற்றனர். ஆரியரது அறிவாற்றல்களுக்குச் சிறிதும் ஆற்றாராய்ச் சுதேசிகளும் விதேசிகளுமாகிய எதிரிகள் அவ்வாரியர்க்குப்பணிந்து அவரால் ஆளப்படுவோராய் அமர்ந்தனர். இவ்வாறு ஆரியர் தம் வெற்றியால் இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையிலுள்ள பெரும் பிரதேசத்தைத் தம்மடிப்படுத்தி, "ஆரியாவர்த்தம்"[1] என்னும் பெயரை அதற்கிட்டு, அதனைத் தமக்குரிய புண்ணியபூமியாகக் கொண்டனர். ஆனால், விந்தியமலையின் தெற்கணுள்ள பிரதேசம் நீண்டகாலம் அவர்களால் குடியேறப்படாதிருந்தது. தமக்குரிய பூமியாகிய ஆரியாவர்த்தத்தினின்று விலகி தக்ஷிணமுதலிய பிரதேசங்கட்குச் சென்றுவரும் ஆரியன் "புனஸ்தோமம்" அல்லது ஒரு ஸர்வபிரஷ்டயாகஞ் செய்தே தன் புண்யபூமியை அடைதற்குரியன்[2] என்னும் விதி ஆரியர்க்குள் விதிக்கப்பட்டிரு

1 மனுஸ்மிருதி II, 23; பதஞ்சலி மஹாபாஷ்யம் II. 4, 10.
2 போதாயனம்—I. 1, 2.

ந்தது. தக்ஷிணப்பிரதேசமும் ஆரியரால் அக்காலத்து வெல்லப்பட்டிருத்தல் கூடுமாயினும் அடர்ந்துசெறிந்த விந்தமலைத்தொடர்ச்சி இடைநின்று தடுத்தமையால், அஃது எளிதிற் கூடவில்லை. ஆரியாவர்த்தத்தில் விளங்கிய ஆரியர், தம்மை மூவகையராகப்பகுத்து, ஆரியாசாரணைக்குரிய'துவிஜர்'எனக்கொண்டதோடு; சுதேசக்குடியினரினும் நாகரிகமிக்கவரும் தம்மைப்போல வந்தேறியிருந்தவருமாகிய வேற்றுநாட்டாரை நான்காம்வருணத்தாராகவும், இந்நாட்டுப் பூர்வகுடிகளை அவரினும் இழிகுலத்தவராகவும் பிரித்தனர். விதேசிகளாகிய நான்காம் வருணத்தார் "சூத்திரர்" எனப் பெயர்கொண்டு ஆரியர்க்குக் குற்றேவல் புரியும் வகுப்பினராக, சுதேசப்பழங்குடியினரோ, அவர்க்குங்கீழான நிலையில், ஆரியரைக்கண்டால் விலகற்குரிய தாழ்வையடைந்தனர். இவையே ஆரியர்களுடைய பழைய கோட்பாடு என்பதற்குப் போந்தசான்றுகள் உண்டாயினும், விரிவஞ்சி இங்கே விரிக்கவில்லை.

இனி, வடகீழ்நாடுகளினின்று வந்த விதேசிகள், ஆரியர் வருகைக்கு முன்னும் பின்னும் இத்தேயத்திற் குடியேறியவர்களென்பது நல்லறிஞர்பல்லோருடைய கொள்கை யென்று கூறினேன். இவர் வங்காளக் கடற்கரைவழியே ஆரியர்புகுதற்குமுன்னரும் தக்ஷிணத்திற் புகுந்திருந்தனர். விந்திய மலையின் தென்பாகம் பெரிதும் அடர்ந்து செறிந்த ஆரணியமாதலால், இவ்விதேசிகள், கடற்கரைப் பக்கத்துள்ள காடுகளைத் திருத்தி நாடாக்கி ஆங்கு வசித்தனர். தக்ஷிணத்துப் பழங்குடியினருடன் இவர்கள் ஒற்றுமையுடன் கலந்து வந்தமையால், அவரது அன்பும் ஆதரவும் இவ்விதேசிகட்கு வாய்த்தன. இக்குடியேற்றவகுப்பார், இயற்கையின் ஊக்கமும் நாகரிகமுமுடைய மக்களாதலால், இவர்களது கூட்டுறவு சுதேசிகட்குப் பெருவிருப்பாயிருந்திருக்கவேண்டும். இக்கூட்டத்தாரில், சேரனே மிகப்பழைய தலைவனாகக் கருதப்படுகின்றான். பிற்காலத்தில், ஆரியரது பிரவேசம் தக்ஷிணத்திலும் நிகழ்ந்தபோது, இவ்விதேசிகள் இந்நாட்டில் இங்கும் அங்கும் நீளக் குடியேறியிருந்ததை நோக்கி இவர்கட்குத் "திராவிடர்" என்ற பெயரை ஆரியர் வழங்கலாயினர். இப்பதத்திற்கு "ஓடி வளைந்தவர்" என்பது பொருள். இத்

திராவிடர் மிகப்பழங்காலத்தே வடகீழ்நாடுகளினின்று வந்தவிதேசிகளேயென்பதனைச் செந்தமிழில் முன்பு வெளிவந்த "தமிழ்ப்பெருமை" என்னும் அரிய வியாசத்தானும் அறிக.

தக்ஷிணப்பிரதேசம் இத்தன்மையதென்பதை நீண்டகாலம் தெரியாதே ஆரியாவர்த்தத்து வாழ்ந்த ஆரியர், விந்தமலையின் தெற்கினும் பிரவேசிக்கத்தொடங்கிய செய்தி ஐதரேயபிராஹ்மணத்தில் முதன்முதற் கேட்கப்படுகின்றது. விசுவாமித்திர முனிவர் தம்முடைய வமிசத்தவர்சிலரைச் சபிக்கநேர்ந்தபோது, புண்யபூமியாகிய ஆரியாவர்த்தத்தினின்று விலகி அதன் எல்லைப்புறத்தே வாழும்படியான கொடுமையை அவர்க்குச் செய்தாரென்றும், அச்சாபத்தையேற்ற அவர்கள், விந்தியமலையின் தென்பாகத்தே, சுதேசப்பழங்குடியினர்க்குரித்தாயிருந்த நாட்டைக்கைப்பற்றி ஆண்டுவந்தனரெனவும் [3] அப்பிராஹ்மணத்திற் கூறப்படுகின்றது. இச்செய்தி, தக்ஷிணத்திலும் முதன்முதல் ஆரியர் பிரவேசிக்கத் தொடங்கியதைக் காட்டுவதாகும். விசுவாமித்திரரது வழியினர் தக்ஷிணத்தே கைப்பற்றிய பிரதேசம் தஸ்யு அல்லது தாஸர்களுக்கு உரித்தாயிருந்ததென்று அப்பிராஹ்மணம் கூறுதலால், தென்னாட்டுச்சுதேசிகளையும், வடநாட்டுச் சுதேசிகளைப்போலவே, ஆரியர் 'தஸ்யு' என்றழைத்தனரென்று வெளியாகிறது. இத்தஸ்யுக்கள் அல்லது தாஸர்கள், ஆரியர் வருகையை நீளத்தடுத்து அவருடன் பெரும்போர் புரிந்துவந்த இவ்விந்திய தேசத்துப்பூர்வகுடிகள் என்பது, இருக்குவேதமந்திரங்கள் பலவற்றால் நன்கறியப்பட்டது. இவ்வாறு ஆரியரது பிரவேசம் சிறுகச் சிறுகத் தென்னாட்டிலும் நிகழ்ந்து பின்னர்முற்ற, வடதேசத்திற்போலவே இங்கும், விதேசிகளாகிய திராவிடர் நான்காம்பிரிவினராகவும், சுதேசப்பழங்குடியினர் அவரினுமிழிந்த பஞ்சமராகவும் பிற்காலத்தே ஆரியராற் கருதப்பட்டார். இவர்களுள்ளே திராவிடரைப்பற்றிய ஆராய்ச்சியை நிறுத்திக்கொண்டு, இத்தென்னாட்டுப்பழங் குடியினருள்ளே சிறந்த வகுப்பினர் சிலரைப்பற்றி இனி ஆராய்வேன்.

இத்தென்னாட்டின் பூர்வகுடிகளாக இக்காலத்துக் கருதற்குரியார் பலராயினும், அவருள் ஒரு நால்வரே சிறப்புடைப் பழங்குடி

3. ஐதரேய பிராஹ்மணம், VII, 18.

யினராகத் தெரியவருகிறது. அவராவார்:—பாணன், பறையன், துடியன், கடம்பன் என்போர். இற்றைக்கு 1800-வருஷங்கட்குமுன், இந்நால்வருமே தமிழ்ப்பழங்குடிகளிற் சிறந்தவராகக் கொள்ளப்பட்டா ரென்பதனை,

> அடலருந்து.................. ....
> ... .குருந்தே முல்லையென்
> றிந்நான் கல்லது பூவு மில்லை
> கருங்கால் வரகே யிருங்கதிர்த் தினையே
> சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
> இந்நான் கல்லது... ....
> [4]பாணன் பறையன் துடியன் கடம்பனென்
> றிந்நான் கல்லது குடியு மில்லை
> யொன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
> யொளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தே
> ... .வினல்லது
> நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே.

என்னும் புறப்பாட்டாலுணர்க. இச்செய்யுளுள்ளே, பூக்களிற் சிறப்புடைய நான்கையும், தானியத்திற் சிறப்புடைய நான்கையும் எடுத்துக்கூறியது போல, "பாணன் பறையன் துடியன் கடம்பனென், றிந்நான்கல்லது குடியுமில்லை" எனத்தமிழ்க்குடிகளிற் சிறப்புடைய நால்வகையைக் கூறியிருத்தல் அறியத்தக்கது. இந்நால்வரையன்றி, வள்ளுவர், பழையர் முதலிய பழந்தமிழ்க்குடிகளும் உண்டு. இவருள்ளே,

பாணர்:—ஆரியரால் இழிகுலத்தவராகக் கருதப்பட்ட சுதேசப்பழங்குடிகளிலெல்லாம் உயர்ந்தவர் இவ்வகுப்பினரே. இவர் கல்வியில் வல்லவராயும், ஆடல் பாடலிற் சிறந்தோராயும் விளங்கினமை பற்றி, திராவிட அரசராலும் குறுநிலமன்னராலும் ஒருங்கே மதிப்புடன் ஆதரிக்கப்பட்டார். பிற்காலத்து, ஆரியரால் இப்பழங்குடியினர் இழிந்த குலத்தவராக ஒதுக்கப்பட்டாராயினும், முற்காலத்தே திராவிட அரசருடன் எவ்வித வேற்றுமையுமின்றி இவர்

4. "துடியன் பாணன் பறையன் கடம்பனென்" றெனவும்பாடம்.

கலந்து களித்து வந்தனர். பண்டைச் சங்கவிலக்கியங்களில், இப்பாணரது பெருமையைக் குறித்துப் பேசாத நூலொன்றேனும் இன்றென்னலாம். முற்காலத்து, தமிழரசர், இக்குடியினரது வறுமை களைந்து அவரைப் பெரிதும் ஆதரித்தமைபற்றி,

"துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி
யிரும்பா ணொக்கற் கடும்பு புரந்ததூஉம்"

"ஊண்சோற் றமலைப் பாண்கடம் பிருத்தும்
செம்மற் றம்மநின் வெம்முனை யிருக்கை"

"பாணர் சுற்றத்துப் பசிப்பகை யாகி"

"பாணர் நாளவை"

"ஒன்னார் ஆரெயில் அவர்கட் டாகவும்
நுமதெனப் பாண்கட னிறுக்குந் தன்மையோய்"

என இவ்வாறே அவர் புலவராற் புகழப்பட்டனர். இப்பாண்குடி மகளிர் "விறலியர்" எனப்படுவர். இவர்க்கு இப்பெயர் "விறல்பட ஆடுத"லால் வந்ததென்பர். இப்பாண்குடியினரது பழைமையான தொழில் "மீன்பிடித்தல்" என்பது,

"பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇ"

எனவரும் பெரும்பாணாற்றுப் பண்டையடிகளானும்,

"அஞ்சி லோதி யசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்
யாணரூர!"

எனவரும் ஐங்குறு நூற்றடிகளானும் விளங்குகிறது. இப்பாணர் தம்முடன் ஒருவகை மூங்கிற்கோலைக் கொண்டு செல்லுதல் மரபாம். இதனை "நுண்கோல் கொண்டு களம் வாழ்த்து மகவலன்" எனப் பதிற்றுப்பத்தினும் "இருங்கழை யிறும்பி னுய்ந்துகொண் டறுத்த, நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரோ, டகவுநர்" என அகநானூற்றினும் வருதலால் உணர்க. பதிற்றுப்பத்துரைகாரர், இம்மூங்கிற் கோல் பாணரது பிறப்புணர்த்துவதென்று கூறுவர். பாணர்க்கு இவ்வாறு மூங்கிற்கோல் கூறியது இன்ன காரணம்

பற்றியென்று துணியக்கூடவில்லையாயினும், இவரது மீன் பிடித்தற்றொழிற்கேற்றதுபற்றி அக்கோல் கூறப்பட்டதோ என்று ஐயம் நிகழ்கின்றது. இனி, இப்பாண்குடியினர் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் எனப் பலவகையினர் என்பர். பழைய தமிழரசர தவைகளில், இப்பாணர் பெரிதும் நன்குமதிக்கப்பட்டதோடு, அவ்வரசர் போர்க்களத்திலிருக்கும்போதும் கூடவிருந்து ஆடல் பாடல்களால் அவரை மகிழ்விப்பதும், பகைவரிடத்தினின்று கவர்ந்தபொருள்களை அரசர் கொடுக்கப்பெறுவதும் பண்டை வழக்கங்களாயிருந்தன. பாணர்கள், தங்கல்விப்பெருமையைக் காட்டி அரசராற் பெறும் வரிசைகள் பலவாம்; அவற்றுள், பாண்மகன் வேந்தரால் பொற்றாமரை சூடப்பெறும் செய்தி முன்னூல்களில் அடுத்தடுத்துக் கேட்கப்படுகின்றது. சுதேசப்பழங்குடியினரெல்லாம் மிகவிழிந்த குலத்தாராக ஆரியராற் கருதப்பட்டிருப்பினும், கல்விப்பெருமை இப்பாணர்பாலிருந்தமைபற்றி, இவரை அவ்வளவு இழிந்தவராகப் பழைய ஆரியர் கருதவில்லை யென்பதும், இப்பாண் மக்கள் தம்மனையை யடைந்தால், இவரை உண்டி முதலியவற்றால் ஆரியரும் உபசரித்து வந்தனரென்பதும் முன்னூல்களிற் குறிப்பிக்கப்படுகின்றன. இதனை,

"மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பிற்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்"

என்னும் பெரும்பாணாற்றுப் படையடிகளில் "மறையவரிருக்கும் ஊரையடைந்தால், அவரால் இன்னின்னது பெறுகுவிர்" என்று ஆற்றுப்படுப்போன் பாணனை நோக்கிக் கூறுமாற்றான் உணர்க. பாணர் இத்தகைப் பெருமையுடையராயினும் சுதேசபழங்குடியினரானமை

பற்றி, பெரிய நகரங்களில் இழிகுலத்தவரையொப்ப, நகர்ப்புறங்களிலேயே இவரிருப்பு அமைக்கப்பட்டிருந்தது. பண்டை நூல்களிலும் நிகண்டுகளிலும் இப்பாணர்க்கு "மாதங்கர்" என்ற பெயரும் படிக்கப்பட்டுள்ளது. இவ்வடமொழிப்பதத்துக்கு "கிராமமத்தியத்தை அடையாதவர்" என்பது பொருளாம். இப்பெயரால், பாணரைப் பிற்காலத்து ஆரியர் விலக்கிவைத்திருந்தமை வெளியாகும். திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார், திருப்பாணாழ்வார் என்னும் சைவவைணவ அடியார்களும், அவர்கள் நாளிலே, ஆரிய கோஷ்டியில் ஒதுக்குண்டிருந்தன ரென்பதும், அவர்களது தெய்வத்தன்மையால் அவர்கள் போற்றப்பட்டாரென்பது சரித்திர பூர்வமாக நாம் நன்கறிவோம். ஆனால் பழங்காலத்தில் திராவிடரால் இவ்விழிதகைமையை அவர்கள் அடையவில்லை யென்பது திண்ணம். இப்பாணர் வேற்றரசர்பாற் றூதுபோதற்கும் பண்டை வேந்தரால் விடுக்கப்பட்டனர். செந்தமிழ்த்தெய்வமென்று கருதப்படும் நல்லிசைப்புலவராகிய ஔவையார், இப்பாண்குலத்தைச் சார்ந்த பெரியோரில் ஒருவரெனின், இக்குலத்தினரின் பழம்பெருமையைப்பற்றிக்கூறவும்வேண்டுமோ? இந்நல்லிசைப்புலவர், விறலியரே யென்பதனை, சேதுஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்களது "ஔவையார்" என்னும் அரியபெரிய விஷயத்துட் கண்டுகொள்க. இப்பாண்குலத்தார், இக்காலத்துத் துன்னகாரராகவுள்ள "பாணார்" என்னும் வகுப்பினரோ என்று கருதப்படுகின்றனர்.

பறையர்:—இவர் சுதேசப்பழங்குடியினருள்ளே தாழ்ந்தவர். இவர் குலத்தார் இக்காலத்து மிகுதியும் உள்ளனர். இவர் தொழில் பறைகொட்டுதலாதலால் இப்பெயர் பெற்றனர்.

துடியர்:—இவர் மருதநில மாக்கள். கிணையென்னும் மருதநிலப்பறை யொலிப்பவராதலால் இப்பெயர் பெற்றனர். இக்காலத்துப் "பள்ளர்" எனப்படுவோர் இவரென்று தெரிகிறது.

கடம்பர்:—இப்பெயர் இப்பழங்குடியினர்க்கு இன்ன காரணத்தால் வந்ததென்று துணியக்கூடவில்லை. முருகவேட்குரிய கடம்பை வளர்த்து வந்தமையாற்'கடம்பர்' எனப்பெயர்பெற்ற சாதியார் விதே

சிகளைச் சேர்ந்தவரென்பதற்குப் பிரபலபிரமாணங்க ளுண்மையால், இவர் அன்னவரின் வேறென்றே தெரிகிறது. ஒரிஸா கஞ்சம் பிரதே சங்களிலுள்ள மலைக்காடுகளில் "கடபர்" என்று ஒரு பழைய குடியி னருள்ளார். இவர் தமிழ்ப் பழங்குடியைச் சார்ந்தவராகிய கடம்பர் வழியினரோ என்று கருத இடமுண்டு. பழையகாலத்தே, ஒரு சேர ன் கடலிற் சென்று, ஆங்குக் கடம்பைத் தன் காவன்மரமாகக் கொ ண்ட பகைவனொருவனை வென்றானென்பது முன்னூல்களால் அறி யப்படுகிறது. இவனும் இப்பூர்வ குடியைச் சேர்ந்தவன்போலும்!

இனி, வள்ளுவர்:—பழந்தமிழ்க் குடியினரில் பாணரையடுத் துத்திராவிடரால் மதிக்கப்பட்டவர் இவ்வகுப்பினரே. இவர், அர சர்பால் கருமத்தலைவராயும், யானைமேலிருந்து முரசறைந்து அரசா ணைசாற்றுவோராயும் விளங்கினர். தெய்வப்புலமைத் திருவள்ளு வர் அவதரித்த பெருமை பெற்றது இக்குலம் என்பது ஈண்டுவிரிக் கவேண்டுவதில்லை. இக்குடியினர் இன்றும் உளர்.

பழையர்:— இவர் மலைநாடுகளில் தேனெடுத்துவரும் ஒருபழங் குடியினர். "பழையர்தம் மனையன பழநறை" என்பது இராமாவ தாரம். இக்குடித்தலைவர் சிலர் முன்னாளிற் சிறந்த வீரராய் விளங்கி னர். சங்ககாலத்தே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியர்க்கு முக்கியப் படைத்தலைவனாக விளங்கிய "பழையன் மா றன்" என்பான், இக்குடியைச் சேர்ந்தவனென்றே கருதப்படுகிறான். இப்பழைய வகுப்பார் மலைநாடுகளில், தமது பண்டைத்தொழிலோ டும் பெயரோடும் இன்று முள்ளனர்.

மேற்கூறியவர்களையன்றி, தமிழ்ப்பழங்குடியினராகக்கருதப்படு வோர் இக்காலத்து வேறுசிலருமுளர். ஆயினும், பண்டை நூல்களில் பாணன் முதலியவர் பழைய வகுப்பாராகக் கூறப்பட்டிருத்தலால், அவர்களது வரலாறு மட்டும் ஒருவாறு இங்கே எழுதப்பட்டது.

பத்திராசிரியர்.

வெண்ணெயூர்ச் சடையபிள்ளை யென்கிற

புதுவைச் சேதிராயர் கல்வெட்டுக்கள்.

யான் இப்பொழுது உரைசெய்து அச்சிட்டு வருகிற சடகோபரந்தாதியின் முதலிற் சிலபாடல்கள் கம்பர்பாடினதாக அறியப்பெறுதலால் அந்தக்கம்பர் சரித்திரத்தைத்தொகுத்து ஒருவாற்றுலொழுங்காக்கி அவ்வந்தாதியோடு பதிப்பிக்கவேண்டுமென்று பலகாலமாக விடுமுறைநாட்களிற் கிராமங்கள்தோறுஞ் சென்றுவிசாரித்து வரும்வழக்கப்படி போகிய ஒருபொழுது மூவலூரிற்கிடைத்தவை வருமாறு—

மூவலூர்ச்சிவன்கோயில் கோபுரவாயிற்படி தென்புறம் சோணைச்சுவரில்மேல் முதல்.

1. வடமொழிச்சுலோகம்

யஸ்ய ஶ்ரீ யஶ(ஸ)ஶ்சக்ர வாலேஷு கமலா ஜரிதா ஶக்ஷஶ:
ஸ ஶ்ரீராஜ கலா மாஶீ சரித்ர்ய ஶஹீதயே ||
ஸ சேதீஶ விஜய யாணாம் விதரணஶீலேய ஶ்வஜாநக்ஷேத்ர
பரிவதித்யே விவஶ்வா ஶ்ரூர நிஶேஹாராத்ரவாஸக: ||

இதன்கீழ்,

தேமா வயங்குசெய் யா மபாற்கடற் சேதிபர்கோன்
மாமால் புதுவைச் சடையன் னனென் மங்கையுங்கே
ஆமா மனையந்த வாயிழை செந்த ... தாசையெல்லாம்
போமாறு கண்டுவிட் டாளென்று கூறுமப் பூங்கொடிக்கே.

அகிலகலாவல்லவன் சேரமான்பெருமாள் வஞ்சிமார்த்தாண்டன் திருப்பரமூத்ததிருவடி சொல்லிவரக்காட்டின *பாகுடக்கவி.

காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை
நாவலரைக் காவலரை நல்லோரைப்—பூவலய
முள்ளத் தகும்புதுவை யூரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து.

* [பாகுடம்—காணிக்கை; இதனைச் சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் (110) செய்யுளுரையிற் காண்க.]

இதன்கீழ்,

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவேரி—பொய்கழுவும்
(போர்) வேற் சடையன் புதுவையா னில்லறத்தை
யார்போற்ற வல்லா ரறிந்து.

(இது சோழமண்டலசதகத்தில் வந்துள்ளது; பாடபேதம் கவனிக்கத் தக்கது).

பேரோசைப் பிள்ளைப் பெருமாளைச் சேதிபனைக்
காரோசைக் கையானைக் க(ண்ட)ரே – பாரோர்
விடுங்கோள் கொடுங்கோ(ள்) விழியருள்பூண் டன்ன
மிடுங்கோள் கொடுங்கே...

வெண்ணெயூர் ஸ்ரீவிசுவநாதனார் கோயில் கோமுகைக்கீழ்ப்படங்கிலுள்ளது. முன்னிருந்தவிடத்துத் துருக்கர் சூழவீடுகட்டினமையால் பாழாயிருந்ததுபற்றி இக்கோயிலை அந்தக்கிராமத்து மகாஜனங்களொன்றுகூடிப் பிரித்துக் கொணர்ந்து மேல்பாற் கட்டுகிறார்கள்.

இது தொண்டைமான் சேக்கிழையார் சாதனத்தின் இறுதியிலுள்ள வெண்பா:—

தண்டீச் சுரன்கோயிற் றுபராஞ்சூழ் வையகத்திற்
கண்டீச சுரங்கருப்ப மீறுகப்-பண்டே!
அறஞ்செய்தான் செய்தா னறநசாத்தான் பாதந
திறம்பாமற் சென்னிமேல் வைத்து.

30-4-06.
கும்பகோணம்
டவுன் ஹைஸ்கூல்

பின்னத்தூர் அ. நாராயணசாமிஐயன்.

மகாபாரதச்செய்யுட்பாடாந்தரம்.

(௱அ௰-ம் பக்கத்தொடர்ச்சி.)

கீசகன்வதைச்சருக்கம்

பேதையிப்படிக்கூறவுங்காதலனைப்பெருகுசிங்கைதயன்பின்னையுமன்
புறு, வாதரத்தெனதாருயிர்போகினுமமையுமென்றவளம்புயச்சீறடி
மீதுநெற்றிபடத்தொழுதான்வடி வேற்கணாளும் வெகுண்டு விரை
வினிற், றாதுளங்கனிவாய்முத்தவாணகைச்சுதேட்டிணைப்பெயராளு
ழைத்துன்னினாள்.

என்னும் எ-ம் செய்யுளில் "பின்னையுமன்புறு" என்றது "பின்னையு முன்புறு" என்று காணப்படுகிறது. கீழ் ரு-ம் செய்யுளில் கீசகன் சொல்லிய அடாதவார்த்தைகளுக்கு நேர்நின்றுத்தரங்கொடாது, அருகுநின்றதோர் கொம்பரின்வாய் மறைந்து திரௌபதி அவனுக்கு நீதிகூறியுங் கேளானாய் மறுபடியுமவளெதிரேபோய் வேண்டித்தொழுதானாதலின் "பின்னையுமுன்புறு" என்பதே ஏற்புடைத்தென்க.

வேறு.

என்றுகொண்டென்றினைப்பலரிந்துமன்றலாற்
கன்றியகீசகக்காலன்முன்புபோய்
மன்றலுந்தொடையலும் வழங்கிமெய்வெரீஇ
நின்றனளாணிலைநின்றகற்பினாள்.

என்னும் உஉ-ம் செய்யுளில் "கீசகக்காலன்" என்பது "கீசகக்கலகன்" எனக்காணப்படுகின்றது. திரௌபதி காரணமாகக் கீசகன் செய்த கலகங்களையெண்ணி, கவி அவனைக் கலகனாகக்கூறினார். திரௌபதிக்கு அவன் காலனன்மையின் "கீசகக்கலகன்" என்பதே ஆசிரியர்கருத்தென்க.

வேறு.

௩௪-ம் செய்யுளின் பின்—

சீரியகங்கனன்றுரைத்தசெம்மொழி
பாரியதாமெனப்பலாயனன்கொளா
வீரியமகத்துளேநிறுத்தும்வேலையிற்
கூரியவிழியினாளழுதுகூறுவாள்.

என்ற ஒருசெய்யுள் காணப்படுகிறது. வீமன் எப்பொழுதும் முன்யோசனையின்றி ஒருகாரியத்தைச்செய்யத்தொடங்குவதும் தருமர் அவனைச்சமயோசிதவார்த்தையாற்றிருப்புவதும் வழக்கம். இதனை, மேற்பதின்மூன்றும் போர்ச்சருக்கத்து ௨௨௩-ம் செய்யுளில் "திறனறியாமலுரைத்தனை மாருதி சிறுவனெனனும்படிநீ" எனக்கடோற்கசனைப்பார்த்துத் தருமர் கூறினதாகக் கவிகூறினமையானும் பிறவற்றானும் அறியலாம். அன்றியும், "தீண்டு தறகாதென" என்னுஞ் செய்யுள்முதல் மூன்று செய்யுளும் திரௌபதி அழுதுகூறுகின்றாள் என்பதும் "கூரியவிழியினாளழுது கூறுவாள்" என்பதனாற் றெளியப்படுகிறது. ஆகவே இக்கவி ஈண்டின்றியமையாததென்க.

௬௪

௮௪-ம் செய்யுளின்பின்—

வாசமென் குழன்மா தநல்லாயுனை
யாசைகொண்டவரிப்படியாவர்கா
ணேசின்மங்கைநல்லாயினியேகெனு
மாசிலானுமடைப்பள்ளியெய்தினான்.

என்ற ஒரு செய்யுள் காணப்படுகின்றது. ௮௪-ம்செய்யுளில் வீமன், கீசகனுடற் பிண்டத்தைத் திரௌபதிக்குக்காட்டுவான் சுவாலை செய்தமை கூறப்பட்டமையான், இச்செய்யுளால் அதனை அவளுக்குக்காட்டித்துயரகற்றியிருப்பிடத்துய்த்துத்தானும் மடைப்பள்ளி சேர்ந்தான் என்பது கூறப்பட்டது. இச்செய்யுள் ஈண்டிராவிடின் வீமன் சுவாலை செய்தபிறகு அவ்விருவருமென் செய்தாரென்னுமையம் பெறப்பட்டமையான், இதுவும் இன்றியமையாச்செய்யுளென்க.

௬௫

துவன்றகற்புடைத்தோகையைவிட்டுமுன்
றுவன்றகீசகர் நூற்றொருமூவரு
மவன்றன்வாகுவினாலழிவுண்டபின்
கவன்றதாலக்கடிநகரெங்குமே.

என்னும் ௧௯-ம் செய்யுளில் "துவன்றகற்புடை" என்பது "துவன்றுகற்புடை" எனக்காணப்படுகின்றது. துவன்றல் - நிறைதல். துவன்றுகற்பு - நிறைந்தகற்பு. துவன்று - வினைத்தொகை; துவன்றிய, துவன்றுகின்ற, துவன்றும் எனவிரியும். 'துவன்ற' என்பது செயவென் வாய்பாட்டு வினையெச்

சமாகையாற் கற்பென்பதனோடு இயையாமையானும் "துவன்றுகற்பு" என்பது நிறைந்தகற்பு, நிறைகின்றகற்பு, நிறையுங்கற்பு எனப்பொருள்பட்டு திரௌபதி கற்பின் மிகுதி விளக்குதலானும் "துவன்றுகற்புடை" என்னும் பாடமே பொருத்தமுடைத்தென்க.

நிரைமீட்சிச்சருக்கம்.

௯க-ம் செய்யுளின் பின்,

என்றபோதவன் பயந்தவட்கியம்பியதுரைப்ப
நின்றபேடியைநிரைவளை தழுவிநீநேரில்
வென்றுபோர்முனையரசரைவிடலைவெய்தீண்டுந்
துன்றுதாரினாயெனவியந்தின்னவைசொன்னாள்.

என்ற ஒரு செய்யுள் காணப்படுகின்றது. கீழே உத்தரன், தான் யுத்தஞ்செய்வதற்குத்தகுந்த சாரதியொருவனில்லாமையாகிய தடையுளதாகத்தன்னாயிடங் கூறக்கேட்ட திரௌபதி, அவனுக்கு விசயனாகியபேடியைக்காட்டி " வித்தரம் பெறு தேர்விடும்விசயனுக்கிவள்" என்றது கூறப்பட்டமையானும், மேலே உத்தரன் பேடி தேர் விடச்சென்றமை கூறப்படுதலானும் இவற்றிற் கிடையே, சுதேட்டிணை, பேடியை முகமன் கூறி வேண்டியதாகச்சொல்லப்பட்ட இச்செய்யுளிருத்தலேற்புடைத்தாமென்க.

ஷை

மன்னொடுசூழநின்றமாசுணமுயர்த்தகோவை
மின்னொடுமுருமேறென்னவெகுண்டுயிர்கவர்வதல்லா
னின்னொடுங்கிருபனோடுநின்மகனோடுமுந்தைத்
தன்னொடும்பரியேன்வெம்போர்தக்கதோசரதம்பாவம்.

என்னும் அசு-ம் செய்யுளில் "வெகுண்டுயிர்கவர்வதல்லால்" என்பது "வெகுண்டமர்புரிவதல்லால்" எனக்காணப்படுகின்றது. அர்ச்சுனனுக்குத்துரியோதனனைத்தோற்கச்செய்து நிரையை மீட்டுத்தன் சௌரியத்தை வெளிப்படுத்தல்கருத்தேயன்றித் துரியோதனனையுயிர்கவர்தல் கருத்தின்மை, கீழ் 'உன்பெருந்துணைவரோடுன்னையோர்கணத், தென்பெருங்கணைகளுக்கிரைகளாக்குவேன், வன்பெருங்கொடிமிசை மடங்கலேற்றினன், றன்பெரும் வஞ்சினந்தப்புமேகொலாம்.' என்னும் எக-ம் செய்யுளாற் பெறப்பட்டமையால் "வெகுண்டமர் புரிவதல்லால்" என்பதே பொருத்தமுடைத்தென்க.

(இன்னும்வரும்)

சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயர்.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம் அரும்பதவிளக்கம்.

(உநகூ-பக்கத்தொடர்ச்சி.)

(௪) ஐம்படை சதங்கை - ஐம்படையுஞ்சதங்கையும். ஐம்படை - பஞ்சாயுதமென்னுமாபரணம்.

(௫) மகன்மை - மகனாந்தன்மை.

(௬) தங்களுடையவருகின்றபிராமணமரபிற்குரிய முறைமையோடிருந்து வளர்ந்து. மங்கலத்தைச்செய்கின்ற அழகையுடைய அரியவேதவிதிப்படி உபவீதத்தையணிந்து.

(௮) குலமுதலறிவுமிக்க கோத்திரமுறையுந்தேர்ந்தார் - குலமுதலையும் அறிவையும் மேற்பட்டகோத்திர முறைமையையுந்தெளிந்தாராகிய: முதியோர் மகட்பேசச் சடங்கவிசிவாசாரியர் நன்மையாக அதனை அங்கிகரித்து: எல்லாமொத்த குணத்தினாலன்போடுடன் பட்டார்.

(௯) மணவினையை மகிழ்ந்துபேசி அரசசெல்வத்திற் கேற்பநாளைக்குறித்து விவாகபத்திரத்தை எங்கும் அனுப்பினார்கள்; நரசிங்கமுனையரையரிடத்திருந்துவளர்ந்தமையாற் கொற்றவர் திருவுக்கேற்பமானார்.

(௧௦) எதிரே வந்துபணிந்து கொண்டார் என்பதனை எதிர்கொண்டுவந்து பணிந்தார் எனமாறுக; கொண்டார் என்பதற்கு அவர்களுடைய வரவை ஏற்றுக்கொண்டார் என்றலுமொன்று.

(௧௧) மணங்கூறி - மணத்தைப்பற்றி மேலும்மேலும் பேசி. போற்றிய தொழிலராகி - செய்ததொழிலையுடையராகி. பந்தலின் கீழே. முளைசாத்தினார்கள் - அங்குரார்ப்பணஞ்செய்தார்கள்.

(௧௨) தோளினானைக்காப்புச்சேர்த்தார் எனக்கூட்டுக. தோளினான் - சுந்தரமூர்த்திநாயனார். சுரும்பணைகோதையெனமாறுக. துணை

தோள் எனஇயைத்து இரண்டாகியபுயமென்க. காப்பு - ரக்ஷாபந்தனம்.

(க௩) மறை - பின்னையது பிராமணன்மேற்று.

(க௪) மார்பினுணங்கியகேள்விமேலோன் - நெஞ்சிற் பொருந்திய மனத்திலுள்ள நுண்ணியகல்வியான் மேம்பட்டவர். மாலை, தார் என்பன மாலையின்விகற்பங்கள். தார்—விடுபூவுமாம்.

(க௫) வாசனைபொருந்திய நெய்யையூட்டி மேலாகியபூக்களின் வாசனைகலந்த சுத்தமாகிய நீரையுடைய பாத்திரத்திற்குப் பக்கத்தே பொருந்திய பரியமணிகளழுத்திய மாற்றுயர்ந்த பொன்னாற் செய்யப்பட்ட திண்ணியகாலையுடைய ஆசனத்தில் (இருத்தி) அழகிய நீரால் அபிடேகஞ்செய்து மஞ்சளணிந்து அன்பினாலே சிவனுக்கினியருடைய மேனியை அழகுபெற விளக்கினார்கள்.

(க௬) முகில் - குடுமி. மதியம் - வெள்ளைவஸ்திரம். நகநுதியை முறையாகப்போக்கி (வகிர்ந்துசிக்கறுத்து) விளங்குகின்ற நறிய குடுமியை முடித்தார்.

(க௭) பான்மறைமுந்நூன்மின்ன - பாலுந்தோற்று மறையும்படி உபவீதம் வெள்ளொளிவிளங்க.

(க௮) வேறான இவைகளைத் தகுதியாற் பொருந்த அணிந்து. நாமம்—புகழ். மாமணியணிந்த கலன்களெனக்கூட்டுக.

(க௯) பொன்னாலலங்கரித்தஅழகுநிறைந்தநற்சுழியையுடைய குதிரைமீதிவர்ந்து சென்றார். மேல்கொள்ளல் - ஏறுதல்: ஒருசொல். யோகம் - உயர்ச்சியுமாம். வேகப்புரவினைவும்பாடம்.

(உ0) தம்மாட்டுவந்து ஏறினார்க்கின்பஞ்செய்தலினாலுயர்ந்த வாகனங்களினுஞ் சிவிகைகளினுமுழையர் ஏறினார் என்க; உழையர்- பக்கத்துள்ளவர்.

(உக-உஉ) இந்த இரண்டுசெய்யுட்கு மெழுவாய் அருங்கடியென்பது; அரியவிவாகம். அரியவிவாகமானது,மங்கலகீதத்தினொலியையுடைய அந்தணர் குழாங்கள் சூழ்ந்து, மாலையும் நறுமணமுஞ்

சூழ்ந்த ஆடவர்களுநெருங்கி, சூதாடுகருவியையும், தாமரைமுகை யையும் வென்று பருத்தெழுந்த அழகின்மேற்பட்ட குங்குமத்தை யணிந்த முலைகளையுடைய பெண்களும் பரந்தெழுகின்ற கொள்கை யையுடையதாகி எழுந்தபோதில், ஆரவாரித்த வெண்மையாகிய சங் குகளாலும் பெரியகுண்டலமாகிய மகரங்களாலும், விளங்குமொளி யையுடைய இரத்தினங்களாலும்.....கரியகடலானது கிளர்ந்தாற் போலத் தோற்றந் தாம் பொலிந்தது.

(௨௩) பிணங்குதல் - ஒன்றோடொன்று தெற்றுதல். மணம் வந்தெய்தலால் அந்நாட்டொடங்கி எந்நாளும் அன்பினால் வருகின்ற குலமறையோர் வசிக்கும் புத்தூர், மணம் வந்த புத்தூர் என்னும் அடையடுத்தது.

(௨௪) உறை - உறைதல்; துளிமலிந்த எனினு மமையும்.

(௨௫) பாய்கின்ற குதிரையும் நம்மிடத்தே மெல்ல நடந்தது என்பார்.

(௨௭) ஒப்பற்ற விவாகத்திறத்தி லப்பொழுது நிகழ்ந்ததைச் சொல்வேன்; அங்ஙனங் கூறுதலா லுய்ந்தேன்; தெளிவுபற்றி இற ந்தகாலமாயது.

(௨௮) ஆலல் - ஒலித்தல். மாலுக்கும் அயனுக்கு மரியா ரொருவர் வந்தார்.

(௨௯) கண்ணை யிடையிலே மறைத்த வெள்ளொளி பொருந்தி ய வஸ்திரத்தைப்போலச் சூழ்ந்த புண்ணியத்தைத் தருகின்ற நெற் றியிற் சுத்தமாகிய விபூதி பொலிவுபொருந்த, குளிர்ந்த சந்திரனை த் முதிர்ந்து கதிரைச் சொரிவதுபோல மேலே முடிக்கப்பட்டதாகி ய வெள்ளிய நரையானது விழுந்திடையிலே சழங்க. சழங்கல் - சப் பழிதல். கதிர்க்கண்ணைக்கரந்த எனினுமமையும். கதிர்க்கண் - அக் கினிநாட்டம். சூழ்நீறு எனக்கூட்டுக.

(௩௰) காதிலணிந்த உருத்திராட்சமாகிய நீண்ட குண்டலந் தொங்க.

(௩௧) வயிற்றிலே சரிந்த கோவணவுடையின் பழமையானது மிக, உடுத்திய ஒப்பற்ற நழுவிய உடையானது நிறைந்தழகைக்கொள்ள, (சழங்கலுடை - சப்பழிந்த உடை யெனினுமாம்) வெண்மையாகிய கௌபீனத்துடனே தருப்பையை முடிந்துவிட்ட மூங்கிற்றண்டை ஒரு கையிற்றாங்கியும் கால் தள்ளாடும் நடையைப் பொருந்த.

(௩௨) கூட்டமாய் வளர்ந்த பெரிய அழகு முதிர்ந்த வடிவேயோ, அத்தகையையுடைய மூப்பென்கின்ற அதன் வடிவேயோ, மெய்ம்மையாகிய முறைமையையுடைய வைதிகமானது விளைந்த முதலேயோ.

(௩௩) நம்பிக்கு மாறாகச் சபைக்கெதிரே நின்றிந்த மொழியைக் கேளுங்கள் என்றார்.

(௩௪) நங்கடவமென்றே சொல்லநின்றது.

(௩௫) யான்முன்னுடைய - எனக்கு முன்னேயுடைய.

(௩௬) எல்லை - உற்பத்தி.

(௩௮) கேட்டவர் - கேட்டவராய்.

(௩௯) ஆளோலை - அடிமையோலை. மேற்சேறல் - எதிர்த்தல்.

(௪௰) நேயமானது தொன்றுதொட்டுக் கிடந்த மனத்தின் நெகிழ்ச்சியாற் சிரிப்பை நீங்கி. உன்னை - உன்னிடத்து. மறையோன் - அண்மைவிளி; மறையோய் எனப் பாடமாயின் நன்று.

(௪௧) யாதும் - சிறிதும். அவ்வளவுக் கென்னைச் சிறிதுமறிந்திலையாயின். வித்தகம் - சாமர்த்தியமொழி.

(௪௨) தரித்த ஒப்பற்ற வடிவத்தாலே மனம் விரும்பி உருகாநிற்கும்; மேற்கொண்ட பித்தரது வார்த்தையோ அதற்குமாறாக உடனே கோபத்தையும் விளைவிக்கும்; அப்பொழுது திருநாவலூரர் ஓர் அடிமையோலையுண்டென்கின்ற அதனுண்மையை அறிவேனென்று உயிர்த்துணைவராகிய சிவபெருமானை நோக்கி அவ்வடிமையோ

*

லையைக் காட்டுவீராக என்றார். ஆக்கும், நிற்கும் என்னும் இரண்டும் முற்று.

(௪௩) சபைக்குமுன்னே நாலோலையைக்காண்பிக்க நீ எனக்குத் தொண்டுசெயற்பாலை என்ற தருணத்தில்.

(௪௪) பூவணத்தவர் - திருப்பூவணமென்னுந் தலத்திலிருக்கும் சிவபிரான். ஆவணம - அடிமையோலை.

(௪௫) அறைகழலண்ணல் - சுந்தரமூர்த்திநாயனார். பிராமணர்க்குப் பிராமணர் அடிமையாய் ஏவல் செய்தல் என்னமுறை என்று கிழித்துவிட்டார். கீறல் - கிழித்தல்.

(௪௬) குழைமறைகாதினனை - சங்கக்குண்டலத்தை மறைத்த திருச்செவியையுடைய சிவபிரானை. பழையமன்றுடி என்னுங் குறிப்புமொழி வழக்கிற்கைவந்தவன் என்பதை உணர்த்துகின்றது.

(௫௦) திரிமுகக்காந்தம - வலிக்கின்ற இடத்தையுடைய காந்தம். திரித்தல் மாறுபடுத்தலாய் ஈண்டு வலித்தல் மேற்று. தீமுகக் காந்தமெனவும, திருமுகககாநதமெனவும பாடபேதம்.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை,

"நாகைநீலலோசனி" ப் பத்திராதிபர்.

கல்லாடம்.

இவ்வகப்பொருளை விளக்கும நூல் இயற்றியவர் கடைச்சங்கத்திருந்தவரும், புறநானூற்றில் குறிக்கப்படுபவருமாகிய கல்லாடரா யிருக்கவேண்டும் என்று சாதாரணமாக எண்ணுகிறார்கள். வாதவூரடிகள் பொன்னம்பலத்து வீற்றிருக்கும் பெருமானுக்குத் திருச்சிற்றம்பலக்கோவை பாடியதுகண்டு வெள்ளியம்பலத்தார்க்கும் அகப்பொருளையொட்டிய நூலொன்று இருக்கவேண்டுமென்று 100-அகவற்செய்யுளால் கல்லாடனா ரியற்றினார் இந்நூல் என்பது ஐதிகம். இப்பொழுது இக்கல்லாடர் கடைச்சங்கத்தார்தாமோ என்பதை ஆராய்வோம்

இவர்காலத்து மதுரைத் திருவாலவாய்ப் பெருமானுடைய திருவிளையாடல்களெல்லாம் நன்றாய்த் தெரிந்திருக்கின்றன. இவர் தருமிக்குப் பொற்கிழி அளித்ததும், இறையனார் அகப்பொருள் தந்ததும், பாணர் கையில் சேரமான்பெருமாள் நாயனாருக்குத் திருமுகம் கொடுத்ததும், தடாதகைப்பிராட்டியை மணந்ததும், வணிகனுக்காக வயோதிகராய் வந்து வழக்குரைத்ததும், வாதவூரர்க்காக நரியைப் பரியாக்கினதும், பிட்டுக்கு மண் சுமந்ததும் முதலான பல திருவிளையாடல்களை வர்ணித்திருக்கிறார். இவர்க்கு சாக்கியநாயனார், மூர்த்தி நாயனார், கண்ணப்ப நாயனார் முதலாய நாயன்மார்களின் சரித்திரமும் தெரிந்திருக்கிறது. இவர் திருக்குறளை மேற்கோளாயெடுத்து ஆளுவதுடன் கூட திருவள்ளுவர் தம் நூலை அரங்கேற்றிய கதையும் குறித்துள்ளார். ஆதலால் இவர் பாணபத்திரர், இவர் காலத்தாராகிய சேரமான்பெருமாள் நாயனார், இவ்விருவர் காலத்தாராகிய சுந்தரமூர்த்திகள் காலத்துக்குப் பிந்திய காலத்தாராகவேண்டும். சுந்தரமூர்த்திகள் காலம், 9-ம் நூற்றாண்டென்று காட்டியிருக்கிறேன்.[1] ஆதலால் கல்லாடம் எழுதியவர் காலம் இதற்கு வெகு பிந்தியது என்பதற்கு ஐயமில்லை.

---

1. செந்தமிழ்த்தொகுதி - ௩, பக் - ௩௨௧. இவ்வியாசத்தில் பல்லவமல்லன் காலத்தார் சுந்தரமூர்த்திகள் என்றெழுதியிருப்பது தவறு. இவ்வொரு விஷயத்தைத் தவிர இவ்வியாசம் கூடியமட்டு சரியென்று தோன்றுகிறது.

பின்னும் கல்லாடம் என்பது ஓர் ஊர் என்பது புதுக்கோட்டையைச்சேர்ந்த சாஸனம் ஒன்றாலும், வாதவூரடிகள் "கல்லாடம் தனில்.. ..." என்று கூறுவதனாலும் நிச்சயமாகக்கொள்ளப்படும். ஆதலால் அவ்வூரார்கள் புறநானூற்றில் குறிப்பிக்கப்படுபவரும், கல்லாடம் எழுதினவரும் என்றும் கொள்ளவேண்டியிருக்கிறது. ஆதலால் கல்லாடர் என்னும் தமிழாசிரியர்கள் இருவராகவேண்டும். அவர்களுள் ஒருக்கால் முதலவர் சங்கமென்பதி லிருந்திருக்கலாமேயொழிய இரண்டாவார் இருந்திருக்க முடியாது. ஆதலால்,

கல்லாடர் செப்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார் சங்கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயும்
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

என்னும் வெண்பா இவ்விரு கல்லாடர்களுக்குள்ளும் வித்தியாசந் தெரியாத போனகாலத்தொருவர் செய்ததாகவேண்டும்.

சிலர் இக்கல்லாடத்தில் திருக்குறள் மேற்கோளாகக் கொள்ளப்பட்டதனால் அது இயற்கையாகவே கல்லாடத்திற்கு முந்தியதென்றும், கல்லாடர் கடைச்சங்கத்தாரானதினால் திருக்குறளாசிரியரும் அக்காலத்தவரென்றும் சாதிக்கிறார்கள். திருக்குறள் மிகப்பழையது என்பதற்கு யார்தான் உடன்படார்? ஆயின் கல்லாடத்தின் காலம் நிச்சயிக்காமல் அதற்கு முந்தியது என்பதினால் திருக்குறளின் காலம் ஏற்படுமோ?

து. அ. கோபிநாத ராவு,
திருவல்லிக்கேணி.

‘ஆயிரம்’ என்பதின் குறிப்பு.

ஆயிரம் என்னும் எண்ணுப் பெயர் வடமொழியிலிருந்து வந்த தென்பது வெகுநாளாக நான்கொண்டிருந்த கொள்கை. அதைப்பல பண்டிதரோடு கலந்து சர்ச்சித்தவளவில், என்கொள்கை சரியே யென்று அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டபடியால் மற்றவர்களால் மறுக்கப்படவாவது அங்கீகரிக்கப்படவாவது நேரவேண்டி அதனைச் செந்தமிழ்வாயிலாக வெளிப்படுத்துகிறேன்.

‘ஸஹஸ்ரம்’ என்னும் வடமொழி பிராகிருதத்தில் சாச்சிரம் என்று மருவுகிறது. அதனையே பழங்கன்னடக்காரர்கள் (கொடுந்தமிழ் நாட்டார்) தம்கிரந்தங்களிலும் சாஸனங்களிலும் “பன்னிற்சாசிரம் ஆளுத்தமிரே” (பன்னீராயிரம் ஊர்களைக்கொண்ட நாட்டையாண்டு கொண்டிருக்க) என்று பிரயோகித்திருக்கிறார்கள். பிற்காலத்தில் இக்கன்னடியர்களே “ஸாயிரம்” “ஸாவிரம்” என்று அவ்வார்த்தையை மாற்றிக்கொண்டனர். இவ்விருவார்த்தையிலும் பின்னது இப்பொழுது வழங்கப்படும் புதுக்கன்னடத்து எண்ணுப்பெயர். ஸாச்சிரம் சாசிரம் என்னும் பிராகிருதபதம் யாயிரம் என்று சகரத்துக்கு யகரம் போலியாகக்கொண்டுமருவியது. யாயிரம் என்னும் பதம் பிற்காலத்து ஆயிரம் எனதிரிந்தது.

ஆயின், தமிழ் கன்னடம் என்னுமிவ்விருபாஷைகளுக்கும் ஆயிரம் - எண்ணுப்பெயரே இல்லையோ, இவ்விருநாட்டாரும் ஆயிரம் வரை எண்ணவும் முடியாத அநாகரிகர்களோ எனில் அப்படி இருக்கவேண்டியதில்லை. இவர்கள் வேறொருவார்த்தை உபயோகித்திருந்து அதைவிட்டுப் பிராகிருதத்தின்மொழியைக் கொண்டிருக்கலாம். தமிழர் கன்னடரிடமிருந்து வெகுகாலத்துக்கு முந்திப் பிரிந்துபோன தெலுங்கர் இற்றைக்கும் “வெய்” (ஆயிரம்) “வேலு” (ஆயிரங்கள்) என்னும் பதங்களையுபயோகிக்கிறார்கள். இதுபோன்ற ஒருவார்த்தை தமிழருக்கும் கன்னடர்க்குமிருந்திருக்கலாம். பழையவார்த்தையைவிட்டுப்புதிய “ஆயிரமெ”ன்னும் வார்த்தையை ஏற்றுக்கொண்டது தொல்காப்பியமுதலிய வியாகரணங்கள் உண்டாகாதகாலத்துக்கு முந்தியாகும்; ஏனெனில் தொல்காப்பியத்திலேயே ஆயிரம் என்பது உபயோகிக்கப்பட்டுள்ளது.

து. அ. கோபிநாதராவு.

உ

சிவமயம்.

இந்துமதம்.

இந்துமதம் என்பது இரண்டு சொற்கள் தொடர்ந்து நிற்கும் ஒரு வாக்கியம். அவ்விரண்டு சொற்களுக்குள்ளே முந்திநிற்கும் இந்து என்பது புதிய வழக்காக இப்பரதகண்டத்தில் வழங்கிவரும் முக்கிய சமயத்தொகுதியை உணர்த்துங் குறிப்புமொழியாயிருக்கின்றது. இந்து என்ற பெயர்க்காரணத்தைப்பற்றிப் பலர் பலவாறாகச் சொல்வர். பின்வந்த மதமென்னும் சொற்சம்பந்தம் நோக்கி, ஒருவித சமயக் கூட்டத்திற்குரிய குறிப்புமொழியென்றே கொள்ளத்தக்கதாயிற்று. மதம், கொள்கை, சமயம், மார்க்கம் என்பன ஒரு பொருட்சொற்கள். ஆகவே, இப்பரதகண்டத்து முக்கிய சமயக்கூட்டக்கொள்கை என்பதே இந்துமதம் என்பதாம்.

ஒரு தோட்டத்தினுள்ளே பலவித மரங்களும் செடி முதலியவைகளும் இருப்பினும், மிகுதியும் தோட்டமுடையாரின் பெருமதிப்பும் பற்றி, ஒருவித மரப்பெயர் கொண்டு, "வாழைத் தோட்டம். அல்லது கமுகந்தோட்டம்" என்று அழைக்கப்படுமாறுபோல, இப்பரதகண்டத்திலே பலவித மதங்கள் வழங்கிவருகின்றனவாயினும், ஆருகதம், பௌத்தம், உலோகாயதம் முதலிய பழைய மதங்களும் இத்தேசத்திற்குப் புதிதாயுள்ள மகமதியம் கிறிஸ்தவம் முதலிய புதுமதங்களும் இந்துமதம் என்னும் தொடர்மொழியினாலே தழுவாமல் விலக்கப்பட்டனவாய், வேதம், உபநிஷத், வேதாந்தம் இவைகளையும், இவைகளின் (வியாக்கியானம்) பேருரை, (தாற்பரியம்) கருத்துரை முதலியவைகள் போன்றுள்ள ஆகமம் புராணம் ஸ்மிருதி முதலியவைகளையும் ஆதாரமாகக்கொண்டுள்ள மதங்களெவையோ அவைகளின் கூட்டத்தையே, மிகுதியும் முக்கிய மதிப்பும்பற்றி இந்துமதம் என்று குறிப்பிடுவாராயினர். வாழை கமுகு முதலியவைகளிலே உட்பிரிவாகப் பல பேதங்களுண்டு; அதுபோல இந்துமதத்திலும் உட்பிரிவுகள், பலவுள. வேதம் என்பது தனது ஒவ்வொரு வகுப்பிற்கே தனித்தனி அளவிறந்த (சாகைகள்) பிரிவுகளையுடைய

தேனும் பெயரளவில் ஒன்றேயாய் விளங்கிநின்றது. அது, சூத்திரரூபம். (அதாவது செய்யுள்.) வேதாந்தமாகிய உபநிஷத்துகளும் அப்படிப்பட்டனவே. ஒரு சூத்திரத்திற்கு அல்லது ஒரு செய்யுளிற்கு வித்துவான்கள்பலர் தமது வித்துவவல்லிமைக்குத் தக்கபடி பலபேதமான அர்த்தங்களை எழுதற்குக் கூடும். அதுபோலவே, வேத வேதாந்தங்களுக்கும் அவரவர் சத்திக்குத்தக்கபடி பலபேதமான அர்த்தங்களைக் கொள்ளக் கூடியதேயாம். அவ்வேதத்தைச் சுயம்பு (தானே தோன்றியது); சுயம்புவாகிய கடவுளாலே தோற்றுவிக்கப்பட்டுள்ளது; ஆதலாலே சுயம்பு என்பது கருத்தாவாகுபெயர்; என்றிந்தப்படி இரண்டு பேதப்படப் பெரியோர் சொல்லுவார். அது தானே தோன்றினும், தானே தோன்றிய கடவுளாலே தரப்படினும் இரண்டும் பெருமதிப்பிற் குரியனவேயாம். இவ்வேதம் இவ்வளவினது என்னும் வரையறை இல்லாததென்பதே பல பெரியோர் துணிபு. முன்னொரு காலத்தில் வேதத்தின் அகண்டசொரூபத்திலே விஷ்ணுவினாலே மும்முறையாகத் தன்கைப்பட மூன்றுபாகங்களை சிருஷ்டிக்காதாரமாகப் பிரமனுக்குக் கொடுக்கப்பட்டதெனவும் அதன் விரிவே தற்காலத்து அகண்டமெனவும் கொள்வர் பௌராணிகர். இவ்வேத வழக்கை வரையறைப்படுத்தி வகுத்தவரும் உளர். அது ஒருகாலத்துச் சிதைந்து மயங்கியபோது வியாசர் செயலாய், வேதம் நான்கு பிரிவுப்பட நின்றது. அதன் முற்காலத்தோ அவ்வகுப்பினதன்று. இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் நான்கு பகுப்புச்செய்த வியாசர் தாமும் வேதாந்தமென்னும் பெயரோடு சூத்திர ரூபமாகவே வேத வேதாந்த சாரங்களையெல்லாம் அடக்கி ஒரு நூல் செய்தனர். வேத வேதாந்த கர்த்தாவாகிய கடவுளின் அருளின்படியே அவைகள் நிலைகுலைந்த காலவியல்பிற்கேற்றபடி வகுத்தும், சுருக்கமாக அவைகளின் கருத்துக்களை அடக்கியும் செய்யப்பட்டதாகலின், அதுவும் வேதாந்தமென்றே பெயர் பெறுதற்குரியதாயிற்று. அவ்வியாசமுனிவர் செய்த வேதாந்த சூத்திரத்திற்கே முன்னுள்ள மதாசாரங்களை அனுசரித்து நான்கு வியாக்கியான கருத்தர்கள் தனித்தனி பொருட்பேத முண்டாக நான்குபேருரைசெய்திருக்கின்றார்கள். அவைகள், சங்கரபாஷியம், மாத்துவபாஷியம், ராமானுஜபாஷியம், நீலகண்டபாஷியம்

என்பவைகளாம். இப்பாஷியங்களைத் தனித்தனி தத்தமக்கு உரியனவாகக் கொண்டுள்ள மதங்கள் முறையே, ஸ்மார்த்தம், மாத்துவம், வைஷ்ணவம், சைவம் எனப்படுவனவாம். இந்நான்கு மதங்களே இந்துமதம் என்னும் பெயராட்சிக்குச் சிறந்துள்ளன. ஏனெனில் அவ்வியாசர் இயற்றிய வேதாந்த சூத்திரம் நேராதாரமாகவும் சுயம்புவாகிய வேதவேதாந்தங்களும் அவற்றின் வியாக்கியான தாற்பரிய சொரூபங்களான ஆகமபுராண ஸ்மிருதிகளும் மூலாதாரங்களாகவும் கொண்டுநின்று வாதிக்கப்படும் சமயங்கள் மேற்கூறிய நான்கேயாயிருத்தலினாலென்க. அவ்வேத வேதாந்தங்கள் கிரியா காண்டம் ஞானகாண்டமென இருவகுப்புக்களையுடையன. அவற்றின் உரைகள்போன்றுள்ள ஆகமபுராண ஸ்மிருதிகளும் மேற்கூறிய கிரியாஞானப் பகுப்புகளையே உடையனவாம். கிரியையாவது, செயல். ஞானமாவது, செயலற்றுத் தெளியுமறிவு. கிரியை, காய்போலவும் ஞானம் பழம்போலவும் உவமிக்கப்படும். காயின் முதிர்வே கனியாதலால் காயின்றிக் கனி பெறுதல் ஒரு சிறிதும் பொருந்தாது. ஒவ்வொரு மதக்கொள்கைகளிலும் கிரியை ஞானம் இரண்டும் அமைந்தே நிற்கும். காயின் முதிர்வே கனியாயினும் காயின் குணம் செயல் பலன்களும், கனியின் குணஞ்செயல் பலன்களும் பெரும்பாலும் நேர் விரோதமாகவே உள்ளன. அதுபோல, கிரியை ஞானம் இரண்டும் அதனதன் தன்மைகளிலே மிக்க வேறுபாடுடையனவேயாம். ஆகவே, வேத வேதாந்தங்களிலும், ஆகமபுராண ஸ்மிருதிகளிலும், அவைகளை அனுசரித்த முற்கூறிய நான்கு மதக் கொள்கைகளிலும், கிரியை ஞானம் இரண்டும் ஒன்றோடொன்று மாறுபட்டனவாய், கிரியையினின்றும் ஞானம் வருதற்குரியதுதாமே புலப்படுத்துவனவாய் உள்ளன. அவ்வித கிரியையோ சரியை கிரியை என இருவகைத்தாம். அவ்வித ஞானமோ யோகம் ஞானம் என விருவகைத்தாம். இதனை நான்காகக்கொண்டு உவமை கூறுவதுமுண்டு. இவ்விஷயங்களில் மேற்கூறிய நான்கு மதத்தார்களும் ஒத்த துணிபினரேயாவர். கிரியைமார்க்கமளவில் ஒவ்வொரு மதத்தார்களும் பேதப்படுதலாலே பெருவிரோதம் உண்டாதலில்லை. அவை, விசாரஞானத்திற்கு வரத்தக்கனவுமல்ல. ஞானமார்க்கத்தின் மாறுபாடுகளே விசாரஞானத்தினாலே தெளிந்து நிலைநி

றுத்திக்கொள்ளவேண்டியனவாம். விசாரித்துத் தெளிந்து நிலைநிறுத்தவேண்டும். ஞானமார்க்க விஷயத்தில் சொற்பொருட்டுணிபு, இலக்கணநெறி, நியாயநெறி முதலிய சிறந்த கருவிகளைச் சுதந்தரமாகப்பெற்றுக்கொண்டிருக்கும் வேத வேதாந்தங்களை ஆதாரமாகக் கொண்டுள்ள இந்துமதத்தின் முன்னர் அக்கருவிகளை நிரம்பவும் பெற்றிராத முதல் நூல்களைத் தத்தமக்கு ஆதாரமாகக்கொண்டுள்ள எந்த மதங்கள்தாம் சமநிலை தூக்கி ஆராயத்தக்கனவாகும். இந்துமத உட்பிரிவாகிய நான்கனுள்ளும் (ஞாதுரு, ஞானம், ஞேயம்) காண்பான், காட்சி, காட்சிப்பொருள் என்னும் மூன்றும் உண்டென்பதும் (தத்துவமசி,) அது நீ ஆதல் உண்டென்பதும் நிச்சயமேயாம். இனி ஞேயமாகிய காட்சிப்பொருள் விஷயத்தில் சகளவடிவாகக்கொண்டு நான்கு மதத்தர்களும் பிணங்குவதன்றி நிஷ்களவடிவாகக் கொள்ளுமிடத்தில் ஒருவித பிணக்குமில்லாதவரேயாவர். சகளம், உருவுடையது. நிஷ்களம், உருவில்லாதது. சகளநிஷ்களம், இவ்விருதன்மையுங் கலந்துள்ளது. அருளேமயமாகிய அருவப்பொருளுக்கு மந்திரமாகிய வைந்தவம், குணகற்பிதம், மாயேயம், பூதசாரம், பூதபரிணாமம், பூதசொரூபம் முதலாக எவ்வெவைகளாகக் கற்பனை செய்யினும் அவ்வவைகளில் அமைந்த பத்தி நியாசங்களுக்கேற்றபடி அக்காட்சிப்பொருளாகிய கடவுளின் நிஷ்கள அருள் வடிவம் புலப்படுதலே அவ்வவைகளின் பெரும்பலன்களாம். இனி ஞானமோ, அபரஞானமாகிய சாஸ்திரஞான முதலியனவும் பரஞானமாகிய அருள் அனுபவக்காட்சியும் என இருதிறப்படுவதாம். பிந்திய அருளனுபவ ஞானமில்லார்க்கு ஞேயமாகிய காட்சிப்பொருள் கிட்டுதல் சொப்பனத்தில் கண்ட சுகம்போலவேயாகும். இவ்விஷயத்திலும் இந்துமத உட்பிரிவுகள் நான்கும் தம்முள் ஒத்து நிற்பனவேயாம். ஞாதுருவாகிய அறிபவன் விஷயத்திலும் அவ்வறிவின் பயனாகிய அனுபவ விஷயத்திலும் மிக்க சிறு பேதங்களை மாத்திரமே தம்முட்கொண்டு சமரசஞானந் தோற்றுநிலையுடையார்க்கு மாறுபட்டுநிற்கும் இயல்பினவாம். இச்சமரசஞானம், அருளனுபவஞானம் இரண்டும் நீடித்த பத்தி வைராக்கியம் குரு உபதேசம் என்னும் இவைகளாலேயன்றி மற்றொரு வழியாலே பெறத்தக்கன அல்லவென்பதும் முந்திய நான்கு மதத்தார்களுக்கும் முக்கிய அணி

பேயாம். காண்பான்காட்சிப்பொருளென்னும் தத்துவ விஷயத்திலும் தத்துவமசி என்னும் வேதவேதாந்த மகாவாக்கியப் பொருள் விஷயத்திலும் ஒற்றுமைப்பட்டு நிற்கும் இந்நான்கு மதங்களும் ஓரோரிடங்களில் ஒரு சிறிதாக மாறுபட்ட வியாக்கியானக்காரர்களாலே மிகவும் பேதமாக மதிக்கப்படத்தக்கனவல்ல.

இனி இந்நான்குமதங்கள் தாமும், பெயர் உபாசனுக்கிரியை முதலியவைகளிலே கவனிக்கப்படும்பொழுதிற்றானும் ஸ்மார்த்தம் சைவவைஷ்ணவ சம்மேளனமாயும், மாத்துவம் பெரும்பாலும் வைணவமும் சிறுபான்மை சைவமும் தழுவி நிற்பதாகவும், மற்றைய சைவவைணவங்களோ திதிசங்காரம் என்னும் இருதொழில்பற்றி, குணம், கற்பிதம், அருள் என்னும் மூவடிவாக வாதித்துப் பேதப்படுதலேயன்றி, முற்கூறிய நிஷ்கள ஆராய்ச்சிப்படி பேதமில்லாமலே முடிதலின், முற்கூறிய நான்கு மதங்களும் பெரும்பான்மையும் ஒருதிறப்படுவனவாய் இந்துமதமெனப்படுவதற்கு ஒருவிதத் தடையுமில்லையேயாம். இந்நான்கின் உட்பிரிவுகளாகிய ஸ்துதி வாதங்களை உறுதியாகக்கொண்ட பத்திமதங்கள் பலவும் இந்நான்கனுள் அடங்கி நிற்பனவேயாம். இந்துமதத்தால் ஆதாரமாகக் கொள்ளப்படும் வேதபுருஷனுக்கு அங்கப் பிரத்தியங்க சாங்கோபாங்கங்களாக ஒருகுறைவுமின்றி எண்ணிறந்த நூல்கள் இயல்பாக அமைந்துள்ளன. யானையைக் காணவிரும்பிய குருடர் ஒருயானையின் அவயவங்களுள் ஒவ்வொன்றனை மாத்திரம் தடவிப்பார்த்து யானையின் பொதுச்சிறப்பிலக்கணங்களைத் துணிந்து கொண்டவாறுபோல, வேதபுருஷனின் அங்கப்பிரத்தியங்க சாங்கோபாங்கங்களுள் ஒவ்வொன்றனை மிகவும் வருந்திப்பிடித்துத் தெரிந்துகொண்ட அறிவைக்கொண்டு, வேதபுருஷனின் பொதுச் சிறப்பிலக்கணங்களும் வேதபுருஷனின் இருதயம் இது என்பதும் விளக்கத் தலைப்பட்டு மயங்கும் இயல்புடையாரும் அவர் நூல்களும் இந்து மதத்திலும் சேர்ந்து வழங்குவதாக அநேகமுண்டு. அவர்களும் அவைகளும் இந்துமதப் போலிகள் எனத்தகும். இனி உண்மையான இந்து மதக் கொள்கைப்படி ஞேயப் பொருளாகிய கடவுளே தத்துவாதீதர். மனத்தால் நினைக்கவும் வாக்கால் இன்ன தன்மையினர் என்று

சொல்லவும் அமைதலில்லாதவர். அவ்வாறு மானதக்காட்சிக்கு அமைதலில்லாதவரைக் காட்சிப் பொருளாகிய ஞேயம் என்று சொல்வது எப்படியெனில், அம்மானதக் காட்சியினும் மேம்பட்ட யோகக்காட்சி அதனினும் மேம்பட்ட அருள்ஞானக் காட்சிகளினாலே, கடைந்த பொழுது தோன்றும் நெருப்புப்பொறிபோலவும், கன்றை நினைந்தவழிச்சுரந்து பொழியும் பசுவின்பால் போலவும், காட்சிப்பொருளாய் வெளிப்படும் இயல்பினர் ஆகலின் என்றறிக. ஆகவே, மானத முயற்சிகள் நியாச உபகாரமாய் அருள்பெறு தற்கு அனுகூலமானவனவாம். அருள்முயற்சி ஒன்றே பயனுடையதாம். அவ்வருளோ அக்கடவுளோடு பிரிப்பின்றி நிற்கும் ஒருவித வல்லமையாம். அவ்வல்லமையும் அக்கடவுளுமே மெய்ப்பொருளாம். அம்மெய்ப்பொருளைக் காண்டற்குப் பொய்ப் பொருளாகிய மனசிற்கு வலி இலதாம். ஆகவே கடவுள் விஷயத்தில் ஏதோஒன்று ஏது என்றுவது ஒன்றுமிலது எல்லாம் கற்பனையே, அக்கற்பனையோ அனுவசியகம் என்றுவது ஒருவித முடிவு கொள்வோமெனத் துணிவார்க்கு உண்மையான இந்துமதமோ ஒருசிறிதும் இடங்கொடாது. பொய்ப்பொருளைக்கொண்டு மெய்ப் பொருளைப் பெறுவதுதான்எவ்வாறெனில், பொய்யாகிய சொப்பனவுடம்பின் சுகானுபவத்தினாலே மெய்யாகிய சாக்கிர உடம்பின் சுக்கிலவெளிப் பாடு காண்பது போலவும்; பொய்யாகிய சாயாநிழலின் சொரூப தரிசனையினாலே மெய்யாகிய சாயாபுருடனின் உதவிகளைச்சிலர் பெறுதல் பிரசித்தமாதல் போலவும்; மானதயோக கற்பனுபதியின் பெருக்கத்தினாலே ஞானநியாசமும், அந்தஞானத்தின் (ஆகரிஷணம்) கவற்சியினாலே ஞேயமாகிய மெய்ப்பொருளும் சித்திக்கத் தக்கது என்று கூறுவதே இந்துமத இருதயமாகும்.

இனி, கிரியை ஞானம் பெறுதற்குக் காரணமாவது எப்படியெனில், கிரியை அனைத்தும் பாவனையோடு கூடியனவாம். அப்பாவனை மனசம்பந்தமுள்ளது. மனம் பலகாலும் பாவனைகாரணத்தினாலே ஒவ்வொன்றனிடத்திலே அழுந்திப் பதிவுபெறப்பெறச் சித்த சுத்தியுண்டாகும்; அந்தச்சித்த சுத்திகாரணமாக மனசிலே அசுத்தம் அணுகுதற்கு இடமுண்டாகாது. ஆகவே, திருவருட்பதிவுண்

டாதற்குப் பேரனுகூலமாகும். அப்படியே இந்துமதாசாரங்களிலே நியமிக்கப்பட்டுள்ள சந்தியாவந்தன முதலாகவுள்ள ஆன்மார்த்த கிரியைகளும், ஆலயப்பிரதிட்டாதி பிராயச் சித்தாந்தம் ஈறாகவுள்ள பரார்த்த கிரியைகளும், விவாக சிராத்தாதி சுபாசுபக் கிரியைகளும், அவ்வவற்றின் உட்பிரிவுகளாய் அளவிறந்துள்ள ஒவ்வொருகிரியைகளும் அவ்வவற்றின் மந்திரபாவனைகளோடு கவனித்துத்தக்க விசாரணை செய்வாருக்கு அவ்வவற்றின் தாரதம்மியங்களுக்கேற்றபடி அமைந்த சாமானிய விசேடபலன்கள் உண்டு என்பதுபுலப்படும். உதாரணமாக ஆலயம் என்பதை எடுத்துக்கொள்ளுவோம். ஆலயம் என்பதற்கு ஞான அமைதி என்பது அர்த்தமாகும். ஆ, என்பது ஞானம். லயம், என்பது ஐக்கியம் அல்லது அமைதி. அதன் பிரதிபதம்: கோயில். கோ- தலைவன். இல்- இருப்பிடம். ஆலயத்தில் முதலிலே அதிதூரத்துள்ளார்க்கும் காணத்தகும்கோபுரக்காட்சி கடவுளொருவருண்டு எனத்துணிந்த ஆஸ்திகரனைவருக்கும் அளவிடத்தகாதபெருமையுடையவர் என்னும் பெருந்தோற்றத்தையும், பெருமதிப்பையுந் தந்து அவரை ஞாபகத்திலும் பாவனையிலும் கொண்டு வரத்தக்க தூலதோற்றப் பலனைத்தரத்தக்கது. இதுபற்றியே அதனை இந்துமதத்தார் தூலலிங்கம் எனப்பெயர் கொள்ளுவாருமாயினர். இலிங்கம், அடையாளம், அறிகுறி. அக்கோபுரவாயிலுள் நுழைந்து, சூக்கும சொரூபியாயிருக்கும் மூலலிங்க சொரூபதரிசனஞ் செய்யவிரும்பும் பக்குவியானோருக்கு முற்பட்டு இருக்கும் பலிபீடமாயுள்ள பத்திரலிங்கம், நான் எனது என்று கொள்ளும் அகங்காரமமகாரங்களெல்லாம் பக்குவப்பட்டு அடங்கி ஒடுங்கி, அவைகளையும் தனது ஆன்ம போதத்தையும் சுதந்தரமாகக் கொள்ளாது சூக்குமலிங்க அருள்வியாபகத்தின் முன்னிலையிலே பலியிட்டுச் செல்லுதற்குரிய பாவனை குறிப்பைத் தருந்தானமாய் அமைந்துள்ளது. பலி- நிவேதனம். பீடம்- இடம். இனி உள்ளமைந்த மூலலிங்கம் கடவுளின் (சொரூபம்) உண்மையை விசாரித்து ஆராய்ந்தறிதற்கு ஆதாரமாய் அமைந்துள்ள ஒரு அடையாளம். மூலம்- ஆதாரம். லிங்கம்- அடையாளம். அம்மூலலிங்கம் கரசரணாதி அவயவங்கள் அமைந்துள்ளதாயின், இன்னவின்ன கரசரணாதிகள் இன்ன வின்ன குணங்களையும் செயல்களையும் அவற்

றின் பயன்களையும் குறிப்பிடுவன எனவும், கரசரணாதிகள் அமையாததாயின், மந்திருண கற்பனைகளுக்கு அதீதமாயுள்ளதாயினும் ஒவ்வோர்விதமான நிஷ்டைகளுக்கு அனுகூலப்படுவதாகவுமுள்ள கடவுளின் (சகள நிஷ்கள) அருவுருவக் குறிப்பைக்காட்டும் அடையாளமுள்ள தெனவும் ஆராய்ந்தறிந்து பாவனை கொள்ளுதற்குக்காரணமாய் நிற்கும் இயல்புடையதாம். இங்ஙனமாகவே, ஆலயத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு தானங்களும், அந்தத்தானங்களிலுள்ள ஒவ்வொரு மூர்த்தங்களும், அவ்வத்தானங்களிலே அவ்வம் மூர்த்தங்களுக்குச் செய்யப்படும் ஒவ்வொருசெயல்களும் ஒவ்வோர் பாவனுபலன்களைக் குறிப்பிட்டனவாயே அமைந்துள்ளன. அவ்வவற்றின் விரிவுகளெல்லாம் கிரியா மார்க்க வியாக்கியானங்களினாலே பெரிதும் விசாரித்து அறியத்தக்கன. ஆயினும், இவையனைத்தின் பிண்டபலன் பாவனுகாரணமாக மனம் கடவுளிடத்தும் அவரருளிடத்தும் பதிவு (நியாசம்) பெறுதலொன்றேயாம்.

இனி, அவ்வியல்புடைய கடவுளின் அருள்பதிதல், அல்லது ஞானம் நிலைபெற்றுண்டாதல், அல்லது அவ்வருள் வியாபகத்தில் ஞாதுருவாகிய நாம் ஆட்படுதல் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என நான்கு தன்மைகளாக அமையப்படும். இவ்வமைதியைச் சத்திநிபாதம் என்பர் பெரியோர். சத்தி- அருள். நிபாதம் - பதிவு. ஆகவே அருட்பதிவென்று முன்னே கூறியதுந் தகுதியேயாம். மந்தம் முதலாகச் சொல்லப்பட்ட நான்கு தாரதம்மியங்களும் அவரவர் மானதயோக முயற்சிகளின் வலிமைக்குத்தக்கபடி அமைவன. அம்முயற்சிகளையே கன்மானுகுணமென்றுஞ் சொல்லுவர். மானதம் என மனதைச் சொல்லவே அதன் வழி நிற்கும் வாசகம், காயிகம் எனப்படும்—இவைகளின் முயற்சிகளும் அதனுள் அடங்கும். அவ்வாசக காயிகங்களைச் சாமானிய கிரியைகளாகவும், அவற்றோடு கூடிய மானசபாவனாதியாநதிகளை விசேட கிரியைகளாகவும், இவற்றின் மேம்பட்ட யோகபாவனாதியானதிகளைச் சாமானிய ஞானமாகவும், இவைகாரணமாக அவ்வருள் ஞானத்தழுந்தலை விசேட ஞானமாகவும் கொள்வர். இதனையே மற்றோர் பிரகாரமாக, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் எனச்சொல்வாரும், கொள்வாரும்

உளர். இன்னுமோர் பிரகாரமாக முற்கூறியசரியை முதலிய நான்கு பாதங்களும் தனித்தனி சரியையிற் சரியை முதலாக நந்நான்கு பதினாறு பேதமாக அவ்வவற்றால் அடையநிற்கும் பலன்களும் அவ்வண்ணமே பதினாறு பேதப்படுமெனவும் பதினாறாவதாகிய ஞானத்தில் ஞானம் சித்தித்தலே அது நீயாதலாகும் (தத்துவமசி) வேதாந்த மகாவாக்கியப்பொருட்பேறு எனவுங்கொள்வர். ஞானத்தில் ஞானம் ஒழிந்த மற்றைய காட்சிகளோ முக்கிய பலன்களை உடையனவல்ல. அவ்வொன்றுமே போதும் எனக்கொண்டு மனவாக்குக்கு அதீதமான அருள் ஞானவிஷயத்தில் அப்படியான வாக்குகளைக்கொண்டு முடிபு செய்தல் பொருந்தாமையாலும், இவைகளையெல்லாம் ஒழித்து அவ்வொன்றையுமே பெறுவோம் எனமுயலுதல், காரணமின்றிக்காரியம் நடவாமையும் சாதனம் இன்றிச் சாத்தியம் இயலாமையும் போலுமாகலால், அருட்பேறு அதிதீவிரதரமளவு முதிர முதிர, கீழுள்ளனவெல்லாம் நழுவி நழுவி விலகி விடத்தக்கனவன்றி மானச வாசக ஞான மாத்திரையாலே நாமாக விலக்கி விடத்தக்கன வல்ல வென்பதும் இந்துமதத்துணிபேயாம். இதுபற்றியே, ஓர் காலத்து வேதங்களைவகுத்து வேதாந்தசூத்திரம் இயற்றியவியாசராதியோரும், அவ்வேதாந்த பாஷியகாரராகிய சங்கராதியோரும், மற்றும் வேதாந்த சித்தாந்த சமரசபிரவர்த்தகர்களாகிய பெரியோர்கள் ஒவ்வொருவரும் பரஞானப் பேற்றிற்குப் பாத்திரரேயாயும் ஞானத்திற் சரியை முதலாக மூர்த்திதல தீர்த்தோபாசனை முதலிய கிரியைகளைத்தானும் தாமாக விலக்கி விடாது நடத்திவந்தனர் என்பது அவரவர் சரித்திரங்களே சாட்சிசொல்லப்பெறும். இங்ஙனமாக எவ்வெவ்வழியாக ஆராயப்புகினும் இந்து மதத்தோர் துணிபு கடவுள் ஒருவர் உண்டு என்னும் ஆஸ்திகமும், அவரை அடைவதற்கு அருள் ஞானமே முக்கிய சாதனம் என்னும் நிச்சயமும், அது பெறுதற்குச் சாமானிய சாதனங்களாகிய கிரியாயோகமார்க்கங்கள் பலவாறாக உள என்பதும் அப்பலவாற்றினுள்ளே எவ்வெவ்வாற்றால் எவரெவர் முயலினும் அவ்வவ்வாற்றின் அந்தமான பிரயோசனம் அருள் ஞானப் பேறாய் அமையவேண்டுமென்னும் சித்தாந்தமும், அதுவே நிலையான பேரின்ப சுகமென்பதும், அதன் கீழுள்ள மற்றையவெல்லாம் நிலையற்ற தாரதம்மியமுள்ள அற்ப சுகங்களென்பதும், பிறவுமேயாம். பத்தி வைராக்கிய ஞானம் எனப்படும் பிரிவு முதலியன வெல்லாம் முற்கூறிய பாகுபாடுகளிலேயே ஒடுக்கிக்கொள்க.

(இன்னும்வரும்.)

மு. சாம்பசிவ நாயனார்,
சாலியமங்கலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

உயிர்.

(மூன்றாந்தொகுதி, ௪௪௦-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி ஆன்மவிலக்கணம்.

க. சீவான்மாக்களெல்லாம் பிரமப்பொருளின் பரிணாமமாய்த் தோன்றி, அறிவிச்சை செயல்களை யடைந்து தீயுஞ்சூடும்போலப் பேதாபேதமாகிய குணகுணித் தன்மையுற்றுப் பல வேறுவகைப் பட்டு நிற்குமென்றா லென்னையெனில், அவ்வாறாகிய சீவான்மாக்களுக்குப் பொறிகரணமுதலிய கருவிகளைப்பொருத்தினாலன்றி அறிய மாட்டாமைக்குக் காரணம் யாது? அதனால் அது பொருந்தாதென்க.

உ. இனிக் குணகுணித் தன்மையின்றிக் கேவலம் அறிவு மாத்திரையாய் நிற்றல் உயிரியல்பென்றா லென்னையெனில், உடலின் கண்ணே அறிவிச்சை செயல்கள் நிகழா, ஆதலாலது பொருந்தாதென்க. உயிரின் சந்நிதியிலே உடலின்கட்கரணங்கள் தொழிற்படுதல் பற்றி அறிவிச்சை செயல்கள் நிகழுமென்பாயாயின், உயிரின் சந்நிதியி லெப்பொழுதும் அறிவிச்சை செயல்கள் நிகழவேண்டும்; அங்ஙனமின்றிப் பிணத்தும் உறக்கத்தும் அவை நிகழ்தலில்லையாம். அதனாலது பொருந்தாதென்க. பிணத்தும் உறக்கத்துங் கரணமொடுங்கினமையால் அறிவிச்சை செயல்கள் நிகழ்தலில்லையென்பாயாயின், பிணத்தும் உறக்கத்தும் உயிரின் சந்நிதிக்குக் கேடில்லையே, அங்ஙனமாகவும் அவ்வறிவிச்சை செயல்கள் நிகழாமையால் உயிரின் சந்நிதிமாத்திரையால் அறிவிச்சை செயல்கள் நிகழும் என நீ கூறியதொழிந்ததென்க. சந்நிதிதான் எதுபோலவென்றால், வியாபகமாய் நிற்கப்பெறுதன்மாத்திரையே சந்நிதியன்று: காந்தமுன் இரும்புபோல உயிர்முன் உடம்பு தொழிற்படுதற் கேதுவாயதொரு குணவிசேடமே சந்நிதி எனக் கொண்டோமாகலின் மேற்கூறிய குற்றம் ஈண்டுப் பொருந்தாதென்பாயாயின், அங்ஙனமாயினும் ஒரு குணமுள்ளதாகிய

காந்தம் இரும்பை யிழுத்தலாகிய ஒரு தொழிலன்றி அகற்றலாகிய மாறுபட்ட தொழில் செய்தலில்லை ஆதலால் நினைத்தல் மறத்தல், ஓடல் இருத்தல், கிடத்தல் நிற்றல் முதலிய மாறுபட்ட தொழில்களை ஆன்மாச் செய்யுமாறு எவ்விடத்தது என மறுக்க. உயிர் உருவப்பொருளென்று லென்னையெனில், இவ்வுடம்பினுள்ளே வேறொரு வடிவங் காணவேண்டும், அங்ஙனமன்றி உருவப்பொருளாய் வருவது காட்சிப் புலனாய்ப் பரிணமித்து அழிவெய்தும் பூதத்தோடொன்றுதல் வேண்டும்; உருவடிவாயிருப்பினுங் கட்புலனாகாதென்பாயாயின், நீ யுருவமெனக் கூறுதலொழிந்து அருவமெனக் கூறுதலமையுமென்க.

பூதம்போலக் காட்சிப் புலனாதற்குரிய தூலவுருவாதலின்றிச் சூக்கும வுருவாய் நிற்பது உயிர் என்று லென்னையெனில், அஃது தூலவுருவைத் தோற்றுவிக்கின்ற சடமாகிய மனாதிகரணங்கள் *தன்மாத்திரைகளானாக்கப்பட்ட § புரியட்டகவுடம்பே ஆகலானும்; அப்புரியட்டகத்தினுள்ளே ஆதிசூக்கும வுருவாய் நிற்பது உயிர் என்பாயாயின், அஃது கலாதத்துவ முதலாகப் பிருதுவிதத்துவமீறாகவுள்ள பரவுடம்பே ஆகலானும், அவ்வுருவங்களனைத்தும் அசித்தாதலும் அசத்தாதலும் ஒரு தலையாகலானும் அவ்வியல்பில்லாத உயிர் உருவப் பொருளாமாறு யாண்டையதென்க.

இனி அருவுருவப் பொருள் உயிர் என்று லென்னையெனில், அருவந்தானே உருவாவதில்லை, உருவந்தானே அருவாவதில்லை ஆகலானும், மறுதலைப்பட்ட இரண்டு தன்மை ஒரு பொருட்குண்டாவதில்லை ஆகலானும்; காட்டமும் அக்கினியும்போல அருவுருவப்பொருள் என்பாயாயின், நீ கூறிய அவ்விரண்டுந் தம்முள் வேறாகி உருவமாய்க்காணப்பட் டுண்மை யொழிந்துபோம்: ஆதலின் ஈண்டுக் கூறிய உவமை பொருந்தாமையானும் அது பொருந்தாதென்க.

உயிர்க்கு வடிவம் அருவுருவம் என்று லென்னையெனில், அது வெளிப்பட்டு நங்கண்ணிற்குப் புலப்படும் வடிவுளதாதல்வேண்டும்;

---

* தன்மாத்திரை—சிவ. இரண்டாஞ் சூத்திரத்திற் காண்க.

§ புரியட்டகவுடம்பு—சிவ. ஷை காண்க.

தலையுவாவில் அருவமாய் நின்றே பின் முறை முறையால் வளர்ந்து பூரணையிலே தூலவுருவாய் விளங்குதல் சந்திரனிடத்துக் காண்கின்றோம். அதுபோலவே உயிரும் அருவமாய் நின்றே கருவுட்பதிந்து முறை முறையால் வளர்ந்து இவ்வுடம்புருவமாய்த் தோன்றுமாற்றால் அருவுருவம் எனக்கூற அமையும் என்பாயாயின், சித்தாய் நித்தியமாய்ப் பந்தத்திற்பட்டு நீங்குவதாகிய வுயிர் அசித்தாய்ப் பூத காரியமாய்ப்பந்தமாவதாகியவுடம்புருவமாமாறியாண்டையதென்க.

இனி ஆகாயம்போல அருவாய் அவிகாரியாய் நிற்பது உயிர் என்று லென்னையெனில்,சரீரத்தைக்கட்டி நடிப்பித்துப்போக்குவரவு செய்வித்து, நிற்பித்தல் இருத்துதல் கிடப்பித்தல் மண்ணிற்புரட்டுதல் முதலியனவாகிய பல விகாரங்களெல்லாஞ் செய்வதென்னை சொல்கவென்க.

சடப்பொருள் சித்தாகாது சித்துப்பொருள் சடமாகாது ஆதலால், உயிர்தான் அறிவில்லாத சடம், அது பின்னர் மனத்தோடு சித்தாய் அறியுமென்பாயாயினும், அக்கொள்கையும், உயிர் சித்தசித்து என்பாயாயினும் அக்கொள்கையும், ஒன்றிலே மாறுபட்ட இரண்டு தன்மை யொருங்கு நில்லாமையாற் பொருந்துமாறில்லை. கருவிகளைப் பொருந்தாத சித்தே உயிர் என்பாயாயின், அக்கொள்கையும், அசித்தாகிய கருவிகளை யடைந்தன்றி யறிதல்கூடாமையால், பொருந்தாதென்க.

இனி உடம்பகத்திலே பரமாணு வளவிற்றாய் நிற்பது உயிர் என்பாயாயில், அது அணுவடிவாகிற் பல துவாரங்களிலே யொரு துவாரத்தாலோடிப்போவதாகும், அன்றி அவ்வுடம்பிற் பொருக்தக்கட்டுண்டற்கு முடம்படாது,பாரந்தாங்கிச்செல்லுதற்கு முடம்படாது, அழிவெய்துஞ் சடமாகிப் பூதபரமாணுக்களோ டொன்றுகும், *அணுக்களுக்கு அவயவப் பகுப்புண்மையால் அவ்வணுவுருவமழிவெய்துமென்க.

இனி உயிரானது உடம்பகத்துப் புன்னுனித் துளிபோல் ஏகதேசமாய் இதயத்தானத்தினிற்ப அவ்வுயிரினறிவு விளக்கின் குண

* அணுக்களுக்கு அவயவப்பகுப்புண்மை சையோகத்தாற் கொள்கவென்றார்.

மாகிய வொளிபோல யாங்கணும் வியாபிக்கும் என்றுலென்னையெனில், உயிர் வகதேசமாயின் முன்னே உயிர் உருவம் எனக்கூறியதற்கு உரைத்த குற்றமெல்லாம் பொருந்தி பழிவெய்தும், குணங்குணியளவினன்றி எவ்விடத்தும் வியாபித்தறிதல் செல்லாது. இன்னும் விளக்கினொளியானது விளக்கினது சூக்கும வடிவேயன்றிக்குணமன்று. ஆகலான் அஃதிண்ணைக் குவமையாகாது; உவமையாமெனவே கொள்வாயாயினும், விளக்கின் சுடர் தொடினன்றிச் சுடாதாகையால், இருந்தவிடத்திலே யறிந்து மற்றுள்ளவிடத்துப் பரிசத்தானும் அறியமாட்டாது; உயிர் பரிசித்தவிடமெங்கும் அறிதலுளதாம். விளக்கு ஓரிடத்திருந்து மற்றுள்ள விடங்களையும் விளக்குதல்போல உயிரினறிவு ஐம்புலனிடத்து மொருங்கேநிகழவேண்டு மென்க.

இனி உடம்பளவிலே நிறைந்து நின்று அங்கேயுணர்வது உயிர் என்றுலென்னையெனில், உறக்கமுறாது ஐம்பொறியினு மொருங்கேயறிவு நிகழ்தல்வேண்டும். பெரியவுடல் சிறியவுடல்களாகிய அவ்வவ்வுடம்பளவிற்குத்தக்க வறிவாதல்வேண்டும். உடம்பி னுறுப்பினைக்குறைப்பக் கூடத்தானுங் குறைந்து பின் மாய்தல்வேண்டுமென்க.

இனி முதல்வன்போல் எங்கணும் வியாபியாய் நின்றறியும் இவ்வுயிர் என்றுலென்னையெனின், அவத்தைகளிற் றங்குதலும் போக்குவரவுகளுறுதலும், எங்ஙனங் கூடும். ஐம்புலனு மொருங்கேயறியாமையு மெங்ஙனங்கூடும். இங்ஙனமெல்லாமாய் வியாபித்தலொழிந்தானுகி உடம்பினு ளேகதேசமாய் நிற்றலும் எங்ஙனங்கூடும். இவற்றைக் கூறுவாயாக. எங்கணும் வியாபகமாய் நின்றறிவதாய சுத்தமாகிய உயிரினறிவை மாயாகாரியந் தடைசெய்து நிற்றலின் உறக்கமுதலியனவுற்று ஏகதேசப் படுவதாயிற்று எனப் பரியாயங் கூறுவாயாயின், அது பொருந்தாது. உடலினகத்துப் புறக்கரணவகக்கரணங்களின் வழியால் அறிவு விளங்குவதாகவும் அஃது இன்றுய்ப் போதலானும், வீடுபெற்ற வழியும் மலமுறும் எனப்பட்டு முத்தியென்பதில்லையாய் முடியுமாகலானும் என்க. வீடுபெற்றபின் உறுமென்பாயாயின், அநாதி நிலையோடு இதனிடை வேற்றுமையின்மையான், அநாதிபந்த முறுதலின்றி முத்தனுய் விளங்குதல் வேண்டுமென்க.

இதுவரையும் ஆணவமலத் துண்மைகொள்ளாத சமயிகள் தத்தமதத்துக்கேற்பக் கூறுமுயிரிலக்கணங்களும் அவைபொருந்தாமையுங் காட்டப்பட்டன. மற்றென்னையோவுயிருக்கிலக்கணமாவதெனின், பின்னர்க்கூறுமாறறிந்துகொள்க.

இவ்வுயிர், அசித்தாதலில்லாத வியாபகப்பொருள்போல வியாபகமாதலும், அதுபற்றி அதிசூக்கும சித்தாதலுமின்றி, அதுவதுவாய் வசிப்புண்ணும் வியாபகமாகு நெறியுடையதாய், அநாதியே பசுத்துவமெனப்படும் ஆணவமலத்தின் மறைப்புண்டு இச்சாஞானக்கிரியைகளையுடையதாய்ப், பசுவெனப்படுந் தூலசித்தாகிநிற்குமென்றறிக. இதுவே உயிர்க்கு அநாதிநிலையாகிய தன்னுண்மை யெனக்கொள்க.

அங்ஙனம் பசுத்துவமாத்திரையாற் கேவலப்பட்டு நின்றவுயிர் அதன்பின் அசுத்தமாயையில் அணைந்த தேவராற் கலக்குண்டபாகமாகிய காரணசரீரத்தைப்பொருந்தி அறிவிச்சை செயல்கள் பொதுவகையாற்சமட்டி ரூபமாய் விளங்கப்பெறும்; அதன்பின் அம்மாயாதத்துவத்தினின்றுந் தோன்றுங் கலாதிகளாகிய கஞ்சுகசரீரத்தைப் பொருந்தி அவ்வறிவிச்சை செயல்கள் வியட்டி ரூபமாய்ப் பிரிந்து தோன்றிச் சிறப்புவகையால் விளங்கப்பெறும். அதன்பின் அந்தக்கரணமுதலியவற்றைத் தம்முளடக்கி நிற்கு முக்குணங்களாகிய குணசரீரத்தைப்பொருந்தி அறிவிச்சைசெயல்கள் பின்னர்க் கூறப்படும் இருவகைச்சரீரங்களிடமாகவரும் விடயங்களின் வியாபரிக்கப் பெறுமென்றறிக.

இங்ஙனம் பசரீரமூன்றையுமுறையா னெய்தியவுயிர் பின்னர்ச்சூக்கும தேகத்தைப்பொருந்தி எவ்விடத்தும் போக்குவரவுகள் செய்து சூக்குமமாகிய இருவினைப்பயன்களையூட்டியுநுகர்ந்தும், பின்னர்த் தூலசரீரத்தைப்பொருந்தி எவ்விடத்தும் போக்குவரவுகள்செய்து தூலரூபமாகிய இருவினைப்பயன்களை யூட்டியுநுகர்ந்தும், இவ்வாறு அதீதமுதலாகச் சாக்கிர மீறாயுள்ள ஐந்தவத்தைப்பட்டு நிற்குமென்றறிக.

மேற்கூறிய காரணசரீரமுதலிய அவ்வைந்தும் அவ்வாறுமுதற் காரணமாகிய மாயையினின்றுந் தோன்றி ஆன்மாவுக்கு வடி

வமாய், முறையே ஆனந்தமயகோசமும், விஞ்ஞானமய கோசமும், மனோமயகோசமும், பிராணமயகோசமும், அன்னமயகோசமும் ஆகிய ஐவகைப்பெயர்பெற்று, அன்னமயமுதலாகக்கொண்டு ஒன்றற் கொன்று சூக்குமமாய் நிற்கக், கேவலத்திலொன்றுமின்றி ஆணவமலமாத்திரையாய் நின்ற ஆன்மா இவ்வைங்கோசங்களில் அதுவதுவாய் வசிப்புண்டு ஏகதேசியாய் அவைகளிற் போக்குவரவு செய்து நிற்குமெனவறிக. கேவலத்திலொன்று மின்றி நின்றஆன்மா மாயையிலங்ஙனங் கலக்குண்டபாகத்தை முதற்கட்பொருந்தி அறிவிச்சை செயல்கள் பொதுவகையால் அவ்வளவு விளங்கப் பெற்ற மாத்திரையே அம்மயக்கவறிவால் ஓரானந்த முண்டாகப் பெறுதலின், அஃதானந்தமயகோசமெனப்பட்டது. ஏனையவுங்காரணக்குறியாமாறுய்த்துணர்ந்து கொள்க. ஆன்மா இத்தரையின்கீழ் மேலுங்கொள்ளிவட்டமெனவுங் கறங்கெனவும் நிமிடத்தின்கட் சுழலும்படி கொண்டுதிரிதல் பற்றி இவ்வைங்கோசங்களை ஐந்துபறவையாகவும், அவற்றுளொரோவொன்றை ஐவகைப்படுத்து முகமுதலிய வுறுப்புக்களாவும் வேதத்துள்ளுருவகஞ் செய்துணர்த்தியவாறு காண்க என்பர் சிவஞானசித்தியாருரையில்.

ஆன்மாவினுண்மையுணர்தற்கு இவ்வைங் கோசங்களை இங்ஙனம் பகுத்தறிதலு மொருசாதன மெனக்கொள்க.

இன்னும் ஆன்மாச் சார்ந்ததின்வண்ணமாய் வசித்திடவருமாற்றிற்குச்சருவஞானோத்திரமாகிய ஆகமத்திலே அவ்வச்சார்புவிசேடம்பற்றிப் பூதான்மாமுதலறுவகைப்படுத்துத் தொகுத்தும் விரித்து மோதியவாறுய்த்துணர்க வென்பர். இதனை அத்துவிதவாக்கியத் தெளிவுரையிற் காண்க.

இனி இங்ஙனம் பந்திக்கப்பட்ட அன்னமயகோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் ஆகிய ஐந்திலும் ஆன்மாவேற்றுமையின்றி நின்றுசெலுத்துமாறு யாங்ஙனமெனில், முறையேதேரைப் பாரிற்செலுத்துவோர் தன்மையும்,மரப்பாவையினையியக்குவோர் தன்மையும்,தோற்பாவையினையாட்டுவோர் தன்மையும், பரகாயப்பிரவேசஞ்செய்வோர் தன்

மையும், வேதியர்வேடர்முதலிய பலவேடங் காட்டி ஆடுவோர் தன்மையும் ஒக்குமெனவறிக. இவையைந்தும் முறையே ஒன்றற்கொன்று அந்தரங்கமாய் அவ்வைங்கோசங்களினும் ஆன்மாநின்று செய்யுமாற்றிற்குவமையாமாறு அறிவுடையார்பாற் றெரிந்துணர்க.

இனி என்மனை என்பதி என்று அபேதமாய் வழங்கவந்தனவெல்லாம் உனக்குவேறுதல் கண்டாற்போல உனதன்றாகிய உடல் பொறி பிராணன் கரணங்களைத் தனித்தனியெனதென்றும், அங்ஙனமுணர்ந்த பசுவுணர்வை என்னுணர்வென்றும், அபேதமாகக் கூறிக்கொண்டு நீ அவைகளின்வேறாய் நிற்கின்றமுறைகாண்பாயாக. மனைமுதலிய புறப்பொருள்கள் என்னின் வேறுதல் கூடும்; உடல் பொறிமுதலியவை என்னைவிட்டு நீங்கமாட்டாவென்பாயாயின் உன்னுடையனவாகி அபேதமாய் எனதென்று வழங்கப்பட்டு நகமயிர் முதலிய சிலநீங்குதலுங் காணப்படுதலால், இதனானும் ஆன்மா அவற்றிற்குவேறென்ப தறிந்துகொள்க.

அற்றேல், உடல்பொறிமுதலியவற்றை எனதென்பது, தன் மனைமுதலியவற்றை எனதென்றதுபோலன்றி இராகுவினது தலையென்றாற்போல் அபேதம்பற்றிக்கூறுங் கருத்தேயாகலின், உரைப்போர்குறிப்பொடு சார்த்திக்காணுங்கால் அவ்விருவகை வழக்கிற்குந் தம்முள்வேறுபாடுண்மையின், அவை தம்முளொக்குமாறு யாங்ஙனமென்பாயாயின், ஆபரணம் ஆடைமாலைமுதலிய புறப்பொருள்களையணிந்தபோது என்னணியானென்று அபேதம்பற்றிய கருத்தால் நினைத்திருந்த நீ நின்னாலணியப்பட்ட அப்புறப்பொருள்களாகிய அணிகலமுதலாயின நீங்கியபோது உனக்கு அந்நியமாய் நீயல்லவாயினாற்போல, உடல்பொறிமுதலிய அனைத்தும் நின்னினின்று மயலாகுமாகலான், உன்னுண்மை யறிந்து நீ இவற்றை நீங்கிநின்றறிவாயாக.

இனி ஆன்மாவை என்னுடைய ஆன்மாவென்றபொழுது யான்வேறு ஆன்மாவேறன்றாகவும் எனதென்றல் யாங்ஙனமெனில், உயிரைவேறாகக் காணுங்கருத்தின்றி இராகுவினது தலையென்றாற்போல ஒருசாரார்கூறுஞ் சிறுபான்மை வழக்காதலின் அஃது அபேதம்பற்றிய வழக்கெனவேயமையு மென்றறிக. விஞ்ஞானமயகோசம்

ஆனந்தமயகோசங்கள் யானல்லேனாகியமுறைமையாதென்னில், இவ்விருவகைக்கோசங்களை யெனதென்றல் ஏனைகோசங்கள்போல வேறாகக்காணும் கருத்தால் எல்லாரானும் வழங்கப்படும் பெரும்பான்மை வழக்காதலின், அஃது அதுபோல அபேதம்பற்றியவழக்கெனவமையாமையின் அவ்விருவகைக்கோசங்களும் ஏனையவுடல் முதலியனபோலவுயிரின் வேறேயாமென்றறிக. புத்தியை மனமென்றும், மனத்தைப்புத்தியென்றும், சித்தத்தை ஆன்மாவென்றும், ஆன்மாவைச்சித்தமென்றும், காரணங்கட்கெல்லாம் பரமகாரணமாகிய சிவபிரானை ஆன்மாவென்றும், ஆன்மாவைச் சிவபிரானென்றும் இங்ஙனம் மூவ்வோரவதரங்களின் உபசாரமாகக் கூறப்படும். உள்ளவாறு நோக்குவார்க்கு மன்றஞான்மாவென்னும் வழக்கில் ஆன்மாவென்றது தன்னோடியையுடைய பிறிதொன்றின்மேல் ஆகுபெயராய் நிற்கும் ஆதலான், அவ்வழக்குப்பற்றி நின்கருத்து நிரம்புமாறில்லை யென்றறிக. ஏனைமூவகைக் கோசங்களையும் வேறாகக் கொண்டு விஞ்ஞானமயகோசம் ஆனந்தமயகோசமிரண்டும் முறையே சீவான்மாவும் பரமான்வுமாமென்பார் மதத்தைமறுத்தற் பொருட்டு அவற்றை வேறு விதந்தோதியவாறெனவறிக.

இனி ஆன்மாவின் வேறாகிய அவ்வைங்கோசங்களை ஆன்மா பொருந்தல்பற்றி ஆன்மா என உபநிடதங்களிற் கூறியதென்பர்; அதுவும் விளக்கிருக்கின்ற தகழியை விளக்கென்றாற்போலத்தானியாகுபெயராதற்குரிய இயைபு பற்றியன்றிப் பிறிதில்லையாகலான், பொறி புலன் கரணமுதலிய வெல்லாவற்றின் கண்ணும் அறியப்படும் பேதயாய்ப் பிரிதலின்றி யறிவதாகிய ஆன்மா அறியப்படு மப்பொருள்கட்கு வேறெனவறிக.

இன்னும், அன்னமயகோசமுதலிய நான்கினையும் ஒரோவொன்றாக விட்டுவிட்டு ஐந்தவத்தைப்பட்டு விழித்தபின் அவை கூடிநின்றறிவிக்கக் காணப்பட்ட கனவைச் சொல்லியுஞ் சுழுத்தியினைக் கருதியும் அவைகட்கு வேறாயுண்டிவினைகளின்றிக் கிடந்துயிர்த்த துரிய துரியாதீதங்களை உண்டிவினைக ளுறுதலாகிய மறுதலையின் வைத்தும் அங்ஙன மவத்தைப்பட்டவாற்றை அறியாநிற்குமாகலால், இதனானுங் கண்டறியப்பட்ட வுயிர் அவற்றின் வேறெனத் தெளிக.

இனி ஆன்மா முதல்வன்போலச் சுத்தசித்தே யென்பாயாயில் மாயாகாரியங்களைப்பற்றி நின்றறிதல் வேண்டா; அவ்வாறன்றி அமைச்சரும் அரசுமபோல அவற்றுடனின்று அம்மாயாகருவிகளைப்பற்றி அறிதலுண்மையால், அநாதியே ஆணவமலத்தின் மறைந்து அருவனாய் நிற்றல் பெறப்படுமென்றறிக.

இதுவரையும் பரமதங்களைப்பரிகரித்து உயிர்க் கிலக்கணங்கூறியது காண்க.

இனி ஆன்மா வெவ்வேறு அவத்தை யணையுமியல்பு.

ஆன்மா மேற்கூறிய மாயாகாரியங்களோடு அமைச்சரும் அரசும்போறலின், அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு உலாப்போந்த அரசன் மீள மாளிகையுட் புகுப்போது வாயில்கடோறும் அவரவர்க்கு விடைகொடுத்து நிறுத்திக் காவலும் வைத்துப் பின்னர் அந்தப்புரத்தின்கண்ணே தனியே செல்லுமாறுபோல, உடம்பின்கண் முறையே அக்கருவிகளி னீங்கிப் பிராணவாயுவைக்காவலாக நிறுத்தி ஐவகை யவத்தையுறுமெனக.

ஆன்மா, அரசன்போல விட்டுவிட்டுச் செல்லுதற்கண் இலாடத்தானத்திற் சாககிராவத்தையுறுமவழி முப்பத்தைந்து கருவிகளும், கண்டத்தானத்திற் சொப்பனவத்தையுறுமவழியிருபத்தைந்துகருவிகளும் இருதயத்தானத்திற் சுழுத்தி யவத்தையுறும் வழி மூன்றுகருவிகளும், நாபித்தானத்திற் றுரியாவத்தையுறும் வழி இரண்டு கருவிகளும், மூலதானத்திலே துரியாதீதாவத்தையுறும் வழி ஒரு கருவியுமா மெனக. இக்கருவிகளின் வகையைச் சிவஞானசித்தியாரிற் காண்க.

மேற்கூறிப்போந்த சாக்கிரமுதலிய அவத்தைகள் ஐந்துங் கீழ்நோக்கிச் சென்றொடுங்குமுறையும மேனோக்கித்தோன்று முறைமையும்பற்றி இருவகைப்படும்; அவற்றுளொன்றாகிய ஒடுங்குமுறையாகியது கன்பார்ச்சிப்புச்சேதுவாய்ப் பிறவிக்கு வித்தாம. மற்றொன்றாகிய தோன்றுமுறையாகியது கன்மநுகர்ச்சிக் கேதுவாகலாற் பரம்பரையிற் பிறவியறத்தற்குக் காரணமாகி மேற்படும, இனி இதயமுதற் றுவாதசாந்த மீறாகிய தானங்களிற் புறக்கரண முட்காரணங்களைப் பற்றியும் பற்றாதும பிரத்தியாகாரமுதல் ஐவகைப்பட்டு நிகழும யோ

காவத்தையும் அதுபோல ஒடுங்கியும் பின்னர்த் தோன்றியும் அவ்வாறே பயன் றருவதன்றிப் பிறிதன்று. ஆதலால் இந்த யோகாவத்தை ஞானவத்தை போலுமென மலையாதொழிக. இங்ஙனங்கூறிய மூன்று பேதமும் முறையே சகலத்திற்கேவலம், சகலத்திற்சகலம், சகலத்திற் சுத்தமென்பர்.

சாக்கிராதி யவத்தையென மேற்கூறிப்போந்த ஐந்தனுள், முதலவத்தையாகிய சாக்கிரத்தை யடையப்பெறும் இலாடத்தானத்தின் கண்ணுஞ் சாக்கிரமுதல் ஐந்தவத்தை யுளவாம், அவை கருவியான் விடயங்களையறியுஞ் செய்கைதோறும் அதிநுணுக்கமாய் இடையீடின்றி நிகழுமாறு நுண்ணுணர்வாற் கண்டுகொள்க. இனி இவைகளன்றி ஞானத்தை யடைந்தவரும் பிறப்பு நீங்கி அருண்ஞானத்தால் வீடுபேறடைதற்கு அவ்விலாடதானத்திற் கேவல சகலங்கணீங்கிய சுத்தத்தினும் அவ்வாறே ஐவகை அவத்தையைக் கூடுவரென்க. இதனைச் சிவஞானசித்தியாரி லுண்மையதிகாரத்திற் காண்க.

மேற்கூறிப் போந்த சாக்கிராதியவத்தைகள் ஐந்தனுட் சாக்கிரத்திலே சுத்தவித்தை, மகேச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்னுமைந்துகருவிகளும், கனவிலே மகேச்சுரமுதலாகிய நான்கு கருவிகளும், சுழுத்தியிலே சாதாக்கியமீறாகிய மூன்று கருவிகளும், துரியத்திலே சத்தியீறாகிய இரண்டு கருவிகளும், துரியாதீதத்திலே சிவதத்துவமாகிய ஒருகருவியுங் கலாதிகடொழிற்படுமிடந்தோறுங் கருவியான் விடயங்களையறியுஞ்செய்கைதோறும் அக்கலாதிகளைச் செலுத்தி நிற்றலைநுண்ணுணர்வானுணர்ந்துகொள்க.

இனிஆன்மா அவ்வாறு நிகழுங்காரியாவத்தைகளை யுறுதற்குக் காரணமாகக் கேவலஞ் சகலஞ்சுத்தமென மூன்றவத்தையடைவன். இவற்றுட் கேவலமாவது தனனுடைய இச்சாஞானக்கிரியைகளினிகழ்ச்சிசிறிதுமின்றித் தான்மாத்திரையுளனாதலாம். பின்னர்த் தனுகரணாதியோடும் முதலவன் கூட்டக்கூடி அவையொருபுடை விளங்குமவதாரத்திலே சகலனாம். பின்னர்ப்பஞ்சமலங்களு நீங்கிப்பிறவியொழிந்து சிவத்தோடுகூடி அவ்விச்சாஞானக்கிரியைகளெங்குமாய் வியாபித்து விளங்குமவதாரத்திற் சுத்தமுடையனா மென்க.

மேற்கூறிய மூன்றவத்தைப் புறுத்தற்குரிய ஆன்மா வரக்கடவனவாகிய காரியங்களுள் உடம்புமுன்னில்லாதவனும், கலாதியறிவோடு முன்சேர்தலில்லாதவனும், * புத்திகுணமெட்டினையும் ஏனைப் போக்கியகாண்டக்கருவிகளையும் முன்பொருந்தாதவனும், இச்சை அறிவு தொழிலிவைமுன்னில்லாதவனும், தனக்கெனவொரு சுதந்திரமுன்னில்லாதவனும், போகத்தின் முன் கொள்கையில்லாதவனும், தோற்றக்கேடுகண் முன்னில்லாதவனும், ஏகதேசியாதன் முன்னில்லாதவனுமாகிக் கேவலாவத்தையில் ஆணவமலத்தோடு மாத்திரங்கூடிநிற்பன். இது தன்னுண்மை யெனப்படுங்கேவலத்தியல் கூறியவாறென்றறிக.

மேற்கூறிய கேவலாவத்தையைப் பொருந்திய ஆன்மா உருவினைக்கொண்டும், போககாண்டமாகிய கலாதியோடு செறிந்தும் போக்கியகாண்டமாகிய புத்தியாதியைச் செறிந்தும், இச்சையுற்றும், நால்வகைவாக்குகளானிகழுமறிவுற்றும், தொழில்களுற்றும், சத்தாதிவிடயத்தில் விருப்பஞ்செய்தும், போகநுகர்ந்தும், தோற்றக் கேடுகளிற்புக்குழன்றும, ஏகதேசியாகி, இப்பத்துக்காரியத்தையுமுடையனுய்ச், சகலாவத்தையிற் சீவித்துநிற்பன். இது தனுகரணுதியை முதல்வன் கொடுத்தபோது சகலனுமியல்புகூறியவாறென்றறிக. மேற்கூறிய கேவலத்தின்மறுதலையாயதிச்சகலமென்க.

மேற்கூறியபத்தினுள்ளே சத்தமாதியாம் விடயத்தில் விருப்பஞ்செய்தல் கழிதற்கேதுவாகிய இருவினையொப்பின்கண்ணே போகபோக்கியக் கருவிகளின் செறிவு கழிதற்கேதுவாகிய சிவசத்திநிபாதமுறுதலால், உருக்கழிதற்கேதுவாகிய குருவருள்பெற்றும், எல்லாயோநியும் புக்குழலுதல் கழிதற்கேதுவாகிய ஞானசாதனமடைந்தும், சென்று திரிதலாகிய யேகதேசத்தன்மை கழிதற்கேதுவாகிய அநாதிமும்மலநீக்கியும், சத்தமாதியாம் விடயங்களிலே நுகர்வதுகழிதற்கேதுவாகிய பழையவாதனை நீக்கியும், பாசவறிவிச்சைசெயல்கள் கழிதற்கேதுவாகிய ஞானம் பெருக்கியும்,

---

* புத்திகுணமெட்டாவன—தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதருமம், அஞ்ஞானம், அவைராக்கியம், அனைசுவரியம், என்பனவாம்.

*

முறையே கிடைப்ப அவற்றான் அக்காரியம் பத்துநீங்கப்பெற்றுச் சிவபிரான்றிருவருளைக்கூடுதல் சுத்தாவத்தையின் இலக்கணமென்க; இருவினை யொப்புக்கு மூலமாகிய சிவபுண்ணியமுஞ், சத்திநிபாதமென்கின்ற அருள்பதிதற்கு மூலமாகிய மலபரிபாகமுஞ் சிவஞான சித்தியாரிற் காண்க. இது சுத்தமுடையனுநியல்பு கூறியவாறென்றறிக. இது இலக்கியவிலக்கணங்கற்றவர்கள் எளிதினுணருமாறு சுப்பிரமணியக்கவிராயர் என்னும் பெயருடைய என்னுடைய நடுவுள்ள பிள்ளை யுதவியால் வரையப்பட்டது.

இங்ஙனம்,
சேற்றூர்ச்சமஸ்தானவித்வான்,
இராமசாமிக்கவிராயர்.

உ

கொழுத்துன்னூசி யுரை விளக்கமும்
மறுதலைக் கடாமாற்றமும்.

யான் நக்கீரனார் எடுத்துக்காட்டிய கொழுத்துன்னூசி யுவமையைத் தொல்காப்பியச் சண்முக விருத்தியில் விளக்கினேன். அதனைச் செவ்வனே யாராயாது பலர் பலவகையாற்சங்கித்தனர். அவற்றிற்கு அவ்வக்காலத்தே விடையுமெழுதினேன். அவையெல்லாம் ஓரிடத்தின்றிப் பல பத்திரிகை வாயிலாக வந்தமையின் ஒருங்குணருமாறு அவற்றைத் தொகுத்து மீண்டு மீங்கு விளக்குகின்றேன்.

கொழுச்சென்ற வழித்துன்னூசி யினிதுசெல்லும். அதுபோலப் பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூலினிது விளங்கும் என்பது நக்கீரனாருரை.

இவ்வாசகத்துள் "கொழுவென்பது பேரிகை கலணை அங்கவடி பறைமுதலாய தோற்கருவி செய்யுங்கால் அத்தோலைத் தைத்தற் பொருட்டு ஊசி செல்லுமாறு வழியாக்குவ தொரு கருவியாம்.

துன்னூசி யென்பது அக்கொழுவால் வழியாக்கியபின் அவ்வழிச்சென்று அத்தோலைத் தைக்கு மூசியாம். கொழுத் துன்னூசியினும் பரியது. துன்னூசி கொழுவினும் சிறியது. துன்னூசி கொழுச்சென்றபின்னர்ச் செல்லின் இனிது சென்றுதைத்துப் பயன்படாததோலினை யொலித்தன் முதலாய பயனுறச் செய்யும். கொழுச்செல்லு முன் செல்லின் இனிது செல்லாதிடையே யொடிந்து தைத்தலைச் செய்யாமையிற் பயனுறுத்தாது. இதுவே உவமையின் கருத்து.

இவ்வாறே பாயிரங்கேட்ட பின்னர் நூல்கேட்பின் அந்நூலினிதுவிளங்கி மாணாக்கரைப் பயனுறுத்தும். பாயிரங் கேளாமுன் கேட்பின் இனிது விளங்காமையின் மறைந்து பயனுறுத்தாது. இதுவே உவமேயத்தின் கருத்து.

தூலப்பொருளுணர்ந்தே சூக்குமப் பொருளுணர்தல் வேண்டுமாதலிற் பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூலினிது விளங்கு மென்றார். இன்றேல் அப்பொருளுணர்ச்சி யெய்தலரிதாம். வானத்து அருந்ததி மீனைக்காண விரும்பினார்க்கு அதனைத் தனியே காட்டின், எத்துணைக் கூரிய கண்ணினராயினுங் காணலருமைபற்றி அருந்ததி காட்டு முன்னர் அதனையடுத்து நின்ற பரிய மீனைக் காட்டும் உலக வழக்கானும் இவ்வுண்மை யறியபபடும். இவ்வாற்றாற் பயனற்ற தோலைத் தைத்துப் பற்பல கருவியாக்கிப் பயனுறுத்துவது துன்னூசியேயாயினும் அது கொழுவால் வழியாக்கியபின்னரே அவ்வழியிற்சென்று தைக்கும்; அதுபோலக் கல்வியின்மையாற் பயனற்ற விலங்கனையாரை மக்களாக்கி நாற்பயனுறுத்துவது நூலேயாயினும், பாயிரங்கேட்டார்க்கே விளங்கலாற் பயனுறுத்தும். அல்லார்க்கு விளங்காமையாற் பயனுறுத்தாதென்பது கருத்தாதல் பெறப்பட்டது. கொழுவென்பது, உழுகொழுவுக்கும் நீரிறைக்குஞ் சாலொடு கட்டுங்கொழுவுக்கும் ஓராயுதத்துக்கும் தோலைத் தொளைக்குஞ் செம்மாரது கொழுவுக்கும் இன்னும் பலவற்றுக்கும் பொதுப்பெயர். அது துன்னூசி இனிது செல்லுமென்றமையால் ஏனைய பொருளை யுணர்த்தாமல் அத்துன்னூசியோ டியைபுடைய செம்மாரது கொழுவை யுணர்த்திற்று. துன்னும் துன்னமும் தொளையாகிய ஊசிக்காதினை யுணர்த்

தும். துன்னல் - தைத்தல். துன்னர் - தையற்காரர் செம்மார். துன்னூசி - தையலூசி, அல்லது தைத்தலைசெய்யுங் காதுடைய ஊசி. ஊசி என்பது எழுத்தாணிக்கும் கூர்மைக்கும் வடக்குக்கும் தையலூசிக்கும் பெயராதலின் அவற்றுள் இதுவென் றுணர்த்தற் பொருட்டுத் துன்னூசி யெனப்பட்டது. துன்னல் தைத்தலாதலின் எனைத்தையாத எழுத்தாணி முதலாய ஊசிகளை யினம் விலக்கிக் கொழுச்சென்றவழித் தைக்கின்ற தையலூசியாகிய செம்மாருசியை யுணர்த்திற்று. கொழுவென்பது பெரும்பாணாற்றுப் படையில் 'நாஞ்சில் உடுப்புமுகமுழுக்கொழு' வெனவும் கந்தபுராணத்துக் 'கொழுப்படையனந்தகோடி குலிசம்வேல் அநந்தகோடி' யெனவும் உழுகொழுவையும் ஆயுதத்தையுங் குறித்துவந்தமை காண்க. செம்மார் கொழு ஆயுதமாகியகொழுப்போலவே வடிவமும் அடிக்கண் மரப்பிடியுமுடைத்து. நீரிறைக்குஞ் சாலொடு கட்டிய கருவியும் கொழுவென்னும் பெயரான் வழங்கப்படுகின்றது. செய்யுள் வழக்கு வந்துழிக்காண்க. உழுகொழுச்சென்றவழியினும் பிறகொழுச்சென்ற வழியினும் துன்னூசிசென்று தைத்தல் வழக்காறன்மையானுங்கொழுவென்று வழங்கும் பல்வகைக் கருவியுள் ஈண்டுச்செம்மார் கொழுவே பொருளாயிற்று. 'கோல்கொழுவென்ப' என்றதன்றி உழுகொழுவே கோலென்ப என்னுமையானும் உழுகொழுவை முழுக்கொழுவென்றும் பெருங்கொழுவென்றும் வேறுபாடுறக் கூறலானும் கொழுவென்பது பல்வகைக் கொழுவுக்கும் பொதுவாதலன்றி உழுகொழுவுக்கே சிறப்பெனல் கூடாமையும் ஈண்டுத் துன்னூசியாற் செம்மாரது கொழுவுணர்த்தலுங் கண்டுகொள்க.

பொருநராற்றுப்படையில் 'வேற்றிழை நுழைந்த துன்னற் சிதா' ரெனவும், புறநானூற்றில் 'பஃறுன்னத்திடைபடுதுரைபற்றிப் பிணிவிடர்' வெனவும் பிங்கலந்தையில் தைத்தல் துன்னலெனவும் வருதலானும் துன்னென்னும் பகுதியடிப் பிறந்த துன்னரென்பது தையற்காரரையும் செம்மாரையும் உணர்த்தலானும் துன்னல் தைத்தலாதலையுணர்க.

'ஊசியொடுகுயின்ற தூசும்பட்டும்' என்புழித் தூசுதைக்கும் ஊசியும் 'கண்டமூசியாணி எழுதுங்கருவி' யென்புழி எழுத்தாணியும்

'குவிமுகிழூசிவெண்டோடுகொண்டு' என்புழிக் கூர்மையும் 'பாசிச்செல்லாது ஊசிமுன்னாது' என்புழி வடக்கூத்திக்கும் ஊசியெனப் பெயர்பெறல் காண்க. இனி வபலின்மாட்டுக் கொழுச் செல்லாதே துன்னூசியழகிற் செல்லுமென்பதோர் மதம்பற்றி யொருசாரார் கொழுவென்பது பலபொருளுணர்த்திலும் இயற்சொல்லாகி உழுகொழுவையும் திரிசொல்லாகிப் பிறபொருளையும் உணர்த்தும் என்றும் திரிசொல்லினும் இயற்சொல்லே ஆற்றலுடைமையின் ஈண்டுப்பிறபொருளுணர்த்தாமல் உழுகொழுவை யுணர்த்திற்றென்றும் துன்னூசி கலப்பையின் ஓருறுப்பென்றும் துன்ன லுழுதலென்றும் முட்போல நீண்ட கலப்பைமுனையே ஊசியென்றும் செம்மார் கொழுவெனக்கொள்ளின் ஈநேர்பமையென்றும் இலக்கியங்களில் வழங்காவிடினும் உலகவழக்குண்மையால் துன்னூசிக்குக் கலப்பையுறுப்பெனப் பொருள்கோடலே சாலுமென்றும் ஊசியெனக் கூறினும் தையலூசியை யுணர்த்தாநிற்பத் துன்னூசியென அடையொடு புணர்த்தல் மாற்றுக்கென்றுங் கூறுப. அவை பொருந்தாமைமுறையிற் கூறுவல். மாலையென்பது பலபொருளொருசொல்லாதலின் மாலைக்காலத்தையும் பூமாலையையும் ஒப்பவுணர்த்தாநிற்ப அவற்றுளொன்றை யுணர்த்துழி இயற்சொலலென்றும் பிறிதொன்றுணர்த்துழித் திரிசொல்லென்றுங் கூடாமைபோலிக்கொழுவென்பதும் பலபொருளொருசொல்லாதலிற் பல்பொருளுணர்த்த அவற்றுள் உழுகொழு உணர்த்துழி இயற்சொல் எனலும் பிறபொருளுணர்த்துழித் திரிசொல்லெனலுங் கூடாது. இத்தகைய சொற்கள் வினைசார்பு இனம் இடம் என இவைபற்றித் தாமுணர்த்தும் பலபொருளுள் ஒன்றனைக் குறித்தல் இலக்கணமாதலன்றி இயற்சொல் திரிசொல் கொண்டு பல்பொருளுள் ஒன்றுகோடல் இலக்கணமாகாமையுமறிக. மாலை பொதுச்சொல்லாயினும் மாலைவந்தானென்புழிக் காலத்தையும் மாலைபுனைந்தானென்புழிப் பூமாலையையும் உணர்த்தினாற்போலக் கொழுவென்பதும் பலபொருளுணர்த்துமாயினும் ஈண்டுத் துன்னூசியைச் சார்ந்துநிற்றலால் அது செய்யுள் வழக்கில் தையலூசியெனவே பொருள்படுமாதலின் அதன் சார்பால் அவ்வூசி செல்லற்குமுன் வழியாக்குவதாய செம்மார் கொழுவை யுணர்த்தும் உழுகொழு முதலாய பிறபொருளுணர்த்தாது.

துன்னூசி கலப்பை யுறுப்பாதலின் அச்சார்பு பற்றிக்கொழு வென்பது உழுகொழுவெனவே படுமெனிற் கூடாது. என்னை? துன்னல் உழுதலென்றும் துன்னூசி கலப்பை யுறுப்பென்றும் பிங்கலந்தைமுதலாய உரிச்சொல்லினும் சான்றோர் செய்யுளினும் காணப்பெறாமையானும் செந்தமிழ் மொழியின்மையானும் ஊசியும் ஊசிக்குரியதைத்தற்பொருளை மயக்கமின்றியுணர்த்தும் துன்னென்னுஞ் சொல்லுஞ்சார்ந்து நிற்றலால் அவ்வூசிக்கினமாயவொன்றுணர்த்தலன்றி இனமில்லாப்பிறிதொன்றுணர்த்தாமையானு மென்பது.

இனிச் செய்யுள்வழக்கிற் கண்டிலமாயினும் சில சாதியார் உழுவினைத் துன்னுவென்றும் சொல்வதுண்டென்றும் துன்னூசி கலப்பையுறுப்பென வழங்குகின்றதென்றும் அவர் சொல்லுகின்றனர். அங்ஙனம் தமிழர் யாண்டுஞ் சொன்னதில்லை. தெலுங்கில் துன்னு என்பது அப்பொருளுணர்த்துமாதலின் அவரும் அவரொடு பழகிய சில தமிழரும் இக்காலத்து வழங்கின் அதுகொண்டு முற்காலத்தெழுதிய துன்னூசிக்குத் தமிழ்வழக்காற் கொள்ளப்படுந்தைத்தற் பொருளையும் அதுசெய்யு மூசியையும் விடுத்து உழுதலையும் கலப்பையுறுப்பையுங் கொள்ளல் கூடுமோ?

துன்னற்குத் தைத்தற்பொருளுண்மையின் அதனடியாகவந்த துன்னர் துன்னகாரரென்பன தையற்றொழில்செய்யுஞ் செம்மார் முதலியோரை யுணர்த்தின. அவ்வாறே துன்னலுக்கு நெருங்கலும் பொருளாமாதலின் அதனடியாக வந்த துன்னியாரென்பது நட்டாரையும் துன்னார் துன்னாதார் துன்னலரென்பன பகைவரையுமுணர்த்தின. இவ்வாற்றானே துன்னலுக்குத் தமிழில் உழுதற் பொருளும் உளதாயின் துன்னர் துன்னியார் முதலாயவற்றுள் யாதானுமொன்று உழவரையுமுணர்த்தல் வேண்டும். அங்ஙனமின்மையானும் அது தமிழ்மொழியன்றென்பது தேற்றம்.

இனித்தமிழ் மொழியின்றாயினுந் திசைச்சொல்லாகக் கொள்ளப்படுமெனின் இத்திசைச்சொல் அக்காலத்தும் வழங்கிற்றோ வென்றாராய்தலுடன் துன்னூசிதையலூசி யென்றவிளக்கமாகிய தமிழ்ப் பொருளை விடுத்துக் கலப்பையுறுப்பென்றவிளங்காத திசைச்சொற் பொருளைக்கோடலெற்றுக்கெனமறுக்க.

இக்காலத்தும் அத்தெலுங்கர் உழவினைத் துன்னெனக் கூறலன்றிக் கலப்பையுறுப்பைத் துன்னூசியெனக்கூறல் யாண்டு மின்றாகவும் கலப்பையுறுப்புத் துன்னூசியென வழங்கப்படுகின்றதென வாளா கூறினார். கரிகூறியாண்டோ ஒருசிறைவழக்குக் காட்டினும் வழக்கெனப்படுவதுயர்ந்தோர்மேற்றேயாதலின் ஏனையோர் வழக்குத்தள்ளற்பாற்று.

இதுவன்றிக் கொழுச் சென்றவழிக் கலப்பையுறுப்புச்சென்றாற்போல வென்றாவது அல்லது அக்கலப்பையின் பரியாய நாமங்களுள்ஒன்று கூறியாவது உவமையை விளக்காமல் உழுதற்பொருளுணர்த்துந் தமிழ்ச்சொற்களைவிடுத்துத் தெலுங்குமொழியாகிய துன்னெனுஞ்சொற்கொண்டமைக்கும் ஊசிக்குச் செம்பொருள் விடுத்து ஊசிபோன்றமுளையெனக்குறிப்புப்பொருள் கொண்டமைக்கும் காரணமின்மையும் இவ்வாறுகூறின் மயங்கவைத்தலென்னுங்குற்ற மாதலுமுணர்க.

இதுவன்றி ஏர்க்குரிய பல்வகையுறுப்பும் தனித்தனி யொவ்வொருபாட்டாற் சிறப்பித்துப்பாடிய ஏரெழுபதுள் இவர்கூறுந்துன்னூசியாகிய கலப்பையுறுப்பைக் கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் கூறாமைக்குக்காரணமென்னை? இதனானே அவர்காலத்தும் வழக்கில்லையென்பது சிறார்க்கும் விளங்கும். கம்பர் கூறாமையால் அது வழங்காமொழி யெனப்படாதெனின் ஏர்க்குரிய பிறவுறுப்பெல்லாங்கூறினார்க்கு இதுவுங் கூறுவிடிற் குன்றக்கூறலாதல் காண்க. இவ்வாற்றாற் கம்பர் காலத்தும் வழங்காமை பெறப்படலின் அவருக்கும் முற்காலத்தாராகிய நக்கீரனார் கோடல் எவ்வாற்றானுமில்லை.

இனிக்கொழுவுங் கலப்பையும் உவமத்திற்கேலாமையுங் கூறுவல். பாயிரங்கேட்புழி உடனிகழ்ச்சியாக நூலுங்கேட்டலின்மையும் பாயிரங் கேட்டபின்னரே நூல் கேட்கப்படலும், பாயிரங்கேட்பின் நூல் இனிது விளங்குமாணாக்கன் பயனுறலும் பாயிரங்கேளாதே நூல் கேட்பின் அந்நூல் இனிது விளங்காமையும் பாயிரமுநூலுங் கேட்டபின் அறிதற்பயனுக்கு வேறுபிறவேண்டலின்மையுமென இவையே உவமத்தால் விளக்கல் வேண்டுமாதலானும் இவை பிறழின் உவமமா

காமையானும் கொழுவுங்கலப்பையு முவமமாயின் அவை இரண்டுங் கொண்டியால் ஒருபொருளாக இயைக்கப்பட்டு மாடிழுத்துச்செல்ல அவற்றினடுவே ஒருங்கு செல்லலன்றித்தம்முட் கொழுச்சென்ற பின்னர்க்கலப்பை தனியே செல்லாமையானும் விரைந்து மரங்தேயாமைப் பொருட்டுக் கொழுக்கட்டலேயன்றிக் கொழுவின்றிக்கலப்பை மாத்திரத்தா லுழினுட் அவ்வினை இனிதாக நடக்குமாதலானுங் கொழுவாலும் கலப்பையாலும் உழினும் அம்மாத்திரையிற் பயனின்றிப் பயன்பட வேண்டிற் பரம்படித்தல் வரம்புதிருத்தல் எருவிடல் நீர்பாய்ச்சல் களைகட்டல் காத்தலெனைப்பின்னும் பல்வினைசெய்தே தீரவேண்டுமாதலானும் அவையுவமத்திற் கேலாமையுய்த்துணரப்படும்.

இனிச்செம்மார் கொழுவையுவமங்கூறின் ஈநோபமையாமென்றார். அங்ஙனமாதல் யாங்ஙனம்? செருப்பு முதலாயினதைத்தலால் ஈநமெனின், அதுபேரிகைமுதலாயவற்றைத்தலைக்கருதாது செருப்புத்தைத்தலொன்றே கருதியிங்ஙனம் கூறியவது பொருந்தாது. பொருந்துமெனின் முடைநாற்றமுடைமையாற் கடலும் கடினமுடைமையால் மலையும் கன்றுலும் ஈயாலும்எச்சிற்படலாற் பாலுந்தேனும் ஈநமெனல் வேண்டும். அவ்வாறு யாருங்கூறார். நாயனையார் கேண்மைதழீ இக்கொளல் வேண்டுமென இழிந்தநாயையும் அதனிடத்துள்ளபிறிதொரு தன்மைகொண்டு உவமங்கூறியசான்றோர் செம்மார் கொழுவை ஈநோபமையெனத்தள்ளுவரோ தள்ளார்.

இனித்துன்னூசி தையலூசியை யுணர்த்தல் நூல்வழக்கிலில்லையென்றார். அது காண்டல் விரோதமாம். துன்னல் தைத்தற்பொருளும் ஊசியொழுத்தாணிமுதலிய பல்பொருளுமுணர்த்தலை முற்காட்டியசெய்யுள் கொண்டுணர்க. தனித்தனி வழங்கலைக்காட்டிய தன்றித் துன்னூசியெனச் சேர்ந்துவழங்கலைச் செய்யுளிற் காட்டியதில்லையாலெனிற், குடக்கட்சேதா கூர்வாயகாக்கை செங்காலன்னம் என அடையொடு வந்தவற்றைத் தனித்தனி வழக்கிற்கண்டமைதலின்றி அவ்வாறே பிறிதொரு செய்யுளினுஞ் சேர்ந்து வழங்கலைக் காட்டுகவென்னுங் கடாவொக்குமாதலின்,இன்னோரன்ன கடாவன்மையறிக.

ஊசியொடு குயின்றதூசும் படடும் என்புழி ஊசிஅடையின்றியேதையலூசியை யுணர்த்தலின் ஈண்டுத்துன்னூசியென அடைகூ

றலெதன்பொருட்டென்றார். ஊசியொடு குயின்றஎன்பதற்கு ஊசியாற்றைத்த என்பது பொருளாகலின் அத்தைத்தல் வினையால்ஆண்டு எழுத்தாணி முதலாய பிறவற்றை விலக்கித்தையலூசியை யுணர்த்தலின் அடைவேண்டுவதின்று. ஈண்டுக் கொழுச்சென்றவழி ஊசி சென்றாற்போலவெனின் எழுத்தாணி சென்றாற்போல வெனக்கூறினும் அமைதலின் ஏனையபொருளை விலக்கற் பொருட்டுத் துன்னூசியென அடைபுணர்த்துக் கூறலின்றியமையாமையாதலேக்காண்க.

இனி மற்றொருசாரார் கொழு வென்றது பாயிரத்தையும் துன்னூசியென்றது நூல் கேட்கின்றானையுங் குறித்துநிற்கும் உவமங்களாம் என்றும் கொழுவென்பது கொழுப்பென்றும் துன்னூசியென்பது அக்கொழுப்பிற்றேய்ந்த தோற்றுன்னரூசியென்றுங் கூறுப. அவ்வுரையும் பொருந்தாமை காட்டுவல்..

கொழுச்சென்ற வழித் துன்னூசியினிது செல்லுமாறுபோலப்பாயிரங்கேட்டார்க்கு நூலினிது விளங்குமென்ற வாசகத்துள் இனிதுவிளங்கற்கெழுவாய் நூலேயாதலின் அந்நூலுக்குத் துன்னூசியுவமமாதலன்றி நூல்கேட்கின்றானுக்குவமமாதல் யாங்ஙனம்? நூலினிது விளங்குமெனற்கு நூல் கேட்கின்றான் இனிதுவிளங்குமெனலே கருத்தெனிற் பாயிரங்கேட்டவழி நூல்கேட்கின்றான் இனிது விளங்குவானென்பது உவமையோடு பொருந்தாமை கருதற்பாற்று. அதனாற் பாயிரங்கேட்டபின் நூல்கேட்டால் இனிது விளங்குமென எல்லார்க்கு மொப்பமுடிந்தபொருள் சிதைதலுங் காண்க. இதுவன்றி நூலினிதுசெல்லுமென்றதன்முன் பாயிரங் கேட்டார்க்கு என்றிருத்தலிற் பாயிரங்கேட்டார்க்கு நூல் கேட்கின்றான் இனிதுவிளங்கு மென்பது பொருளின்மையின்றியிடர்ப்படலுமறிக.

இனிப்பாயிரங் கேட்டார்க்கு அதுசென்றவழி நூலினிது செல்லு மென்பதே கருத்தாகலின் அதற்கேற்பக் கொழுச்சென்ற வழியென்பது கொழுவானது சென்றவழியெனஎழுவாயாதலன்றிக் கொழுப்பிலகட் சென்றவழியென வழாவதுருபேற்று விரிதலுங் கூடாது. கூடுமெனிற், கொழுப்பிற்சென்றவழித் துன்னூசியினிது செல்லுமாறு போலவென உவமையை விரித்தாங்குப்பாயிரத்துட்

சென்றவழி நூல்கேட்கின்றான் இனிது விளங்குமெனப் பொருளை யும் விரித்தல்வேண்டும். அங்ஙனம் விரித்தற்கியலாதாகலின் அதுவும் பொருந்தாது. இவ்வாற்றாற் கொழுவென்பது கொழுப்பையுணர்த்து மெனக்கொண்டு கூறியவுரையும் பொருந்தாமை காண்க.

இனிமற்றொருசாரார் உழுகொழுவுந்தையலூசியு மெனக்கூறுவர். தாசுதோல் முதலாயவற்று ளொன்றில் உழுகொழுச்செலுத்தி அவ்வழியே ஊசிகொண்டு தைத்தலும் உழுகொழுச் செல்லும் வழியாகிய படைச்சாலில் ஊசிகொண்டு தைத்தலுமின்மையின் அப்பொருள் பொருந்தாது. அற்றன்று; பரியஉழுகொழுச்சென்றால் அவ்வழிச்சிறிய ஊசிசெல்லல் எளிதாமன்றே? அதுபோலப்பாயிரங் கேட்டவழிநூலெளிதின் விளங்கு மென்பதே கருத்தாதலிற் பொருந்துமெனின் அது கருத்தாயிற் பாயிரமே யுணர்தற்கரிய பொருளுடைத்தென்றும் நூலெளியபொருளுடைத்தென்றும் பொருந்தாப் பொருள் தந்து நூலுணர்ச்சிக்குப் பாயிரவுணர்ச்சி காரணமாதலை யுணர்த்தாமல் வழுப்படும். அன்றியும் உழுகொழுச்சென்ற வழியில் துன்னு மூசியும் துன்னுதை எழுத்தாணி முதலாய வூசியும் இனிது செல்லற்கண் ஒருதன்மையவாக அவற்றுள் துன்னூசியென இனம்விலக்கி யொன்றனையே கூறற்கும் உழுகொழுவினும் பரிய எழுமுதலாகிய சென்றவழியினும் அக்கொழுவினுஞ் சிறிய எழுத்தாணி முதலாய சென்றவழியினுந் துன்னூசியொருதன்மைத்தாகவே இனிதுசெல்லலின் அவற்றுள் உழுகொழுவொன்றனையே கூறற்குந்தக்ககாரணம் யாதொன்றுமின்மையிற் குற்றமாம். இதுவன்றிக் கொழுச்சென்ற வழித்துன்னூசியினிதுசெல்லும், அதுபோல என்று கூறினாராதலின் இவ்வுவமை எடுத்துக்காட்டென்பது பெறப்படலின் உலகியலல்லாமல் உழுகொழுச்சென்றால் அவ்வழித் துன்னூசி இனிது செல்லுமெனத்தாமாகப்படைத்துக்கூறும் வினையைக் கூறலுங்குற்றமாம். இவ்வாற்றால்இவ்வுரையும்பொருந்தாமைகாண்க

இங்ஙனம் ஏனையோர் உரைவழுவுடைய வெனவும் தைத்தற்கு வழியாக்குங் கொழுவுந்துன்னூசியு மெனக்கொண்டு யான்கூறிய வுரைவழுவின்றெனவும் விளக்கப்பட்டமையின் யான்கூறியவுரையே முன்னோர் கருத்தொடு முரணாதவுரை யெனத்தெளிக.

அரசஞ்சண்முகன்.

ஒட்டக்கூத்தர்

தக்கயாகப்பரணி பாடிய வரலாறு.

[கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர், தக்கயாகப்பரணியென்னும் அரியதொரு பிரபந்தம் பாடியிருத்தல் பலரும் அறிந்தது. அப்பரணி இன்னும் அச்சிடப்பெறவில்லை. அவ்வரிய நூலை, கூத்தர் பாடிமுடித்ததன் வரலாறு, இற்றைக்கு உ௮௦-வருஷங்கட்குமுன்பு செய்யப்பட்டதென்று தெரியவரும் "வீரசிங்காதனபுராணம்" என்னும் நூலினுள்ள "அகளங்கசருக்கம்" என்னும் பகுதியில் விரிவாகக் காணப்படுகின்றது. அப்புராணத்தை நன்கு பரிசோதித்தும், அப்புராணகதைகளை இனிய செந்தமிழ் நடைப்படுத்தும் சென்றவாண்டில், சிதம்பரம் ஈசானியமடம் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்நூலில் ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி பாடிய பகுதியைமட்டும், செந்தமிழ்ப்பிமானிகளும் படித்து மகிழவேண்டி, அப்புராணத்திற் கண்டவாறு கீழே தருகின்றேன்:—பத்திராசிரியர்.]

நீர்வளநிலவளங்களாற் றனக்கிணையில்லாத சோழமண்டலத்தே, களத்தையொழித்த சற்குணங்களுடைமையால் "அகளங்கன்" எனக் கீர்த்திபெற்ற இராஜராஜன் என்னும் பெயருடைய சோழன் செங்கோல் செலுத்திவருங்காலத்தில், அவனது வாயிற்புலவராய், கலைமகள் ஆணுருவெடுத்தாற்போல ஒட்டக்கூத்தர் என்னுங் கவிசிரேஷ்டரொருவர் இருந்தார். அவர் தொண்ணூற்றறுவகைப் பிரபந்தங்களை விதிவழாது பாடுதலினும், முன்னோரது இலக்கணவிலக்கியங்களிலுள்ள பொருணுணுக்கங்களும், நவரசங்களும் புலப்படப் போதித்தலினும் வல்லுநராய், நாற்கவிராசராய், முத்தமிழ்த்துறைபோயவராய், சங்கச்செய்யுள், புராணம், தருக்கமுதலியன வல்லாராய் எல்லாப்புலவரும் புகழ வாழ்ந்திருந்தனர். அக்காலத்தில், குடந்தை வீரசிங்காதனமடத்தில் வாழ்ந்த தவசிகள் பலர். அவருளொருவர் முத்தமிழ் விரகராகிய ஆளுடையபிள்ளையார் தேவாரத்தையோதிப் பலியேற்பவர். அவர், திருவீழிமிழலையீசர் திருப்பதி

கத்தை ஓதிக்கொண்டு பலியேற்கு மொருதினம், அத்திருப்பதிகத்தி லுள்ளதாகிய "கல்லாணிழற்கீழா யிடர்காவாய்" என்னுந்தேவா ரத்தைச் சொல்லிக்கொண்டே ஒட்டக்கூத்தரது மனைவாயிலினி ற்க, அப்புலவர் பலவுமறிந்தவராயினும், அத்தேவாரப்பொருளைப் பலகாற்சிந்தித்தும் விளங்காமையின்மயங்கி, அச்சிவயோகியாரை "இத்தேவாரத்தின் பொருள் கூறுக" என்று கேட்டனர். அவ்யோ கியார் சினந்து, 'இதன் பொருள் யானறிந்திலேன்: நீயறிந்துரைப் பினும்,அத்தேவாரத்தின் ஒருமொழியேனும்பொருள் நிரம்புமோ' என்றனர். இதுகேட்ட புலவர், விருப்பமிகும் இன்னிசையோடு பாடுதலால் நிச்சயித்தற் கரிதாயிற்று; ஆகலின், அதன் பொருள் யாது என்று கேட்டவழி, அவர் அதன் பொருளை மொழியாது வசைமொழிந்தன ரென்று பெருங்கோபங்கொண்டு, அச்சிவயோ கியாரைப் புலவர் கசைகைக்கொண்டு அடிக்க, அவரும் மடிந்து வீ ழ்ந்தார். மாறுபட்ட மனத்துடன் பெருஞ்சினங்கொண்ட ஒட்டக் கூத்தர், அழிவற்ற சிவனடியார்க்கு இவ்வாறு அழிவியற்றித் தம் மனையடைய, அச்சிவயோகியார் வசிக்கும் மடத்திலுள்ள சங்கமர்க ள் இச்செய்தி கேட்டலும் பெரிதொலித்தெழுந்து ஆசிரியரையிறை ஞ்சி அநுமதிபெற்று வில் வாள் அம்புமுதலிய ஆயுதங்களை யேந்திய வராய் அப்புலவர் மனையை அடைந்தனர்.

இவர்கள் வருவதை முன்னமே அறிந்த புலவர் அரசனையடை ந்து நடந்ததனைத்தும் அறிவிக்க, ஒரு பசுக்கன்றின்பொருட்டுத் தன் புதல்வனைத் தேர்க்காலிலிட்டறிய சோழன் குலத்துதித்த இராஜ ராஜன் கேட்டு, பெரிதும் மயங்கிக் கலங்கி; இப்பெரும்பழிக் கென் செய்வதென்று நடுங்கி நிற்க, அத்தருணத்தே, ஆங்குப் புலவரிருப் பதையறிந்த சங்கமர்கள் அரசன் திருமுன்பெய்தி நடந்ததை முறை யிட்டார்கள். அம்முறைப்பாடு கேட்ட மன்னன் "சிவபெருமானுக் குரிய வடிவம் குரு, இலிங்கம், சங்கமம் என மூன்றாகுமென்று வே தாகமங்கள் இயம்பாநின்றன. இவ்வொட்டக்கூத்தர் இவற்றையெ ல்லாம் அறிந்தும், தம்மனையிற் பலிக்கெய்தி யாதொரு குற்றமுமில ராய்நின்ற சிவயோகியாரைக்கொன்று நம்பாலடைந்தனர். இதற்கு யாது புரிவம் என்று வருந்தி அச்சங்கமரை நோக்கி "அடிகளே!

இச்சங்கமக் கொலைக்குச் சிவாகமங்களில் விதித்த பரிகாரம் யானே புரிகின்றேன்" என்று பணிந்தனன். சங்கமர், அக்கூத்தனை நாங்களே ஒறுத்தற்குரியேம்; ஆதலால் அவனைக் கொண்டாலன்றி மீளேம் என்றுறுதியாக நிற்க, அரசன் புலவரை வேறோரிடத்திற் சேமித்துவைத்து, தன் புதல்வனை மந்திரியால் அழைப்பித்து, 'எனக்கு நேர்ந்த குறையை மாற்றுவாயாக" எனத் தன் மகனை வேண்ட, அவனும், "பிதாமாதாக்கள் இயம்பியது யாதாயினும் அது தவமென்று கொள்வதே மைந்தர் கடமை; சூரியகுலத்தவருள் தந்தை, ஆசிரியர் இவர் சொற்களைக் கடக்கும் கொடியோரை இப்பூமி தாங்காது. நரகமே தன்பாற்கொள்ளும். மனைவி, புத்திரர் செல்வமுதலியவை அருமையல்ல; கீர்த்தியொன்று அரியது. உடலம் நிலையன்றென்பதை அறிந்தும் அதைப் பொருளாக எண்ணி, உமதுரையைக் கடப்பவனல்லேன். என்னை உமதிஷ்டப்படியே செய்க" என்றனன். இவற்றைக்கேட்ட மன்னவன் மகிழ்ந்து மகனை மூடுபல்லக்கில் ஏற்றித் திரையிடுவித்துக்கொண்டு அவையை யடைந்து, சங்கமரை நோக்கி, "சங்கமக்கொலைபுரிந்த இவனை நீர் நோக்குவதுந்தகுதியன்றுதலால், ஓர் மறைவிடத்தில் வைத்துக் கொல்க" எனக் கூறி விடுத்தான்.

அரசன் சொல்லை மதித்து அச்சிவிகையுடன் ஓரிடத்தைச் சேர்ந்தபோது, அச்சங்கமருட்சிலர் 'இவன் ஒட்டக்கூத்தன்தானா? என்று முகத்தைப்பார்த்துத் தெரிந்துகொண்டு பின் கொல்லவேண்டும். செய்யுங்கருமத்தைத் தெளிந்துகொள்ளாமலே செய்யின், அது மனத்துன்பத்துக்கு ஏதுவாகும்'என்ன,இதுகேட்ட அனைவரும் அவ்வாறே பார்க்கவிசைந்து சிவிகைத்திரையை நீக்குதலும்,அரசனுடைய குமாரன் அதிலிருத்தல் கண்டு கவலைகூர்ந்து, அவனை அணைத்துக்கொண்டு எல்லாரும் அழுதொலிக்க, அக்குமாரன் "நீவிர் எண்ணியதை என்பாற்செய்க" என்றனன். அப்பெரியரோ, "குழந்தாய்! பாதகமெவற்றினும் கொடிய சங்கமக்கொலை புரிந்தவன் ஒட்டக்கூத்தனாயிருக்க, அவனை விடுவித்து இளவரசுக்குரிய நின்னைக் கொல்லும்படி, நின்பிதா வஞ்சகம் செய்தான்" என்னனும், புதல்வன் "யானும் என் தந்தையும் உடன்பட்டு இவ்விதச் செயல் புரிதலின்

நீர் விரும்பி எங்களுடன் பாட்டின்படி புரிவது நீதியாம்'' என்றனன். இது கேட்டதும், அப்புதல்வனது அரும்பெருஞ்செய்கையை வியந்து கூறி அவனுடன் திரும்பி அரசனிடஞ்சென்று " அண்ணலே! உன் அரும்பெறற்புதல்வனைக் கொன்று கொலைஞனாகிய கூத்தனைக் காக்கவெண்ணியது நீதியா; நீதிப்படி புலவரை எம்பாற்றருக " என்று உறுதியாக நின்றனர்.

இம்மொழிகேட்டுக் கலங்கியவேந்தனது செயலறவு நோக்கிய ஒட்டக்கூத்தர், வேறொருசூழ்ச்சியை உள்ளத்திலுன்னி, 'அரசே என்னை, இவ்வடியர்பால் ஈக; அடைக்கலம் புக்கயானே இவர்க்கீக என வேண்டும்போது நீர் தருதலால் உமக்கு வருங்குறையாது' என்றவளவில், 'இதனால் வித்துவாபிமானம் இலனாபினேன்; இனி உங்கள் சித்தம்' என்று அரசன் கூறினன். உடனே புலவரைக் கொண்டு அச்சிவனடியார் சென்றனர்; சூரியன் மேற்றிசையடைந்தான்.

அக்காலத்தே, புலவரும் அக்கூட்டத்தவரைவணங்கி, "யான் முக்காலமும் சிவபூசைசெய்யும் நியமமுடையேன்; இன்று அந்நியதி தவறிற்று; அது தவறாவண்ணம் விடைநல்க'' என்று கேட்டுக் கொள்ள, அப்பெரியோரனைவரும் அன்புடன் "அதுபுரிக'' என்றனர். புலவர் அங்குள்ள அரிசொலார்நதியடைந்து நானமாடி வெண்ணீறுங் கண்டிகையுமணிந்து ஐந்தெழுத்தைச் சிந்தித்துச் சிவபெருமானைப்பூசித்து 'என்மனக்கவலையகல அருள்புரிக' எனப்பிரார்த்தித்து, பின்பு அருகிலிருந்த முளைச்சாளம்மை என்னுங் காளிகோயிலை அடைந்து யாவரும் விலகியிருக்குந் தருணம் பார்த்து அக்கோயிற் கதவடைத்துத் தாழிட்டுக் கொண்டனர். இஃதறிந்த சிவனடியார்கள் பொருங்கோபங்கொண்டு புலவரை எவ்வாறாவது கொல்ல நினையுங்கால், அவருட்சிலர், புலவர் ஆலயத்துளிருப்பதால் விடிந்தபின் வெளிப்படுத்திக் கோறலே விழுமிதென்றுசொல்ல, அதற்குடம்பட்டு அன்றிரவு அவரெல்லாங் காவல் பூண்டிருந்தனர்.

உள்ளேயிருந்த புலவர் 'இவ்வாபத்தை அகற்றியருள்வாய்' என்று அக்காளிகாதேவியைப் பிரார்த்தித்தவழி தேவி அவர்முன்பு தோன்றி, "அருந்தவர்க்கு அநாதித்தெய்வமாகவிளங்கும் வீரபத்திரக்கடவுளே எம்குலதெய்வம என்றெண்ணி, அப்பெருமான்பேரில்

ஓர்பிரபந்தமியற்றுக'' என்றனள். அதுகேட்டபுலவர், தேவியே! யானியற்றும் பிரபந்தத்தை, நீயே எழுதத்திருவுளம் வைத்தால் விரைவின் முடித்துவிடலாம் என்னலும் தேவியும்சம்மதித்து,புலவர் சொல்லச்சொல்லஎழுதிவருவாளாயினள். இங்ஙனம் எழுதும்போது தேவியின் ஒருகையிலேந்திய தீபம் சிறிது சலனமடைய, அத்தருணம், புலவர் வீரரசம்பாடும் நிலைமையிலிருந்ததினால் அக்குணமுடையராய், 'கைத்தீபம் அசைவதென்' என்று அத்தேவியின் கன்னத்திலே தங்கரத்தாலடித்து, பின்சாந்தரசம் மோதுங்கால் தாம் செய்ததவறு தெளிந்து உடனடுங்க,தேவியும், பரிவுடன் 'இச்செயல் நின்போதமின்றி நிகழ்ந்ததாகலின் அதுபற்றிக் கவலற்க' என்றருளினள்.

இவ்வாறு, வீரபத்திரக்கடவுள் வெற்றியை நாற்சீரடிப் பாடல்களால், 'பரணி' என்னும் பிரபந்தமாகப் பாடிமுடித்தலும் சூரியனும் இருளகல உதயமாயினன். காத்திருந்த சிவசரணரும் புலவரை வெளியேறும்படி அழைத்தனர். அதற்குப் புலவர் 'யான் இரவில் வரைந்ததொரு புத்தகம் இஃது' என்று ஓர் துவாரத்தின் வழியே பரணியை நீட்ட, அதனை வாங்கி வாசித்து, இவ்வாறு நம்கடவுள் சரித்திரத்தை முடித்தது வியப்பு எனக்கூறி அதனைப் பாராட்டி, கோபந்தணிந்து குதுகலித்தவராய் தங்கைக் கத்தியைத் துவாரத்தின்வழியே நல்கி 'உமதிஷ்டப்படி செய்வீராக' என்று கூறினர். அதைக்கேட்டபுலவர் 'யான்செய்த கொலைகாரணமாக என்னைக்கொல்லத் துணிந்த நீர் இங்ஙனமிசைத்தல் என்? எனவினவ, அச்சிவசரணர், 'நம்கடவுள் தக்கன்யாகத்தை அழித்தசரிதத்தை நீர் இனிது பாடிமுடித்தமையால், உம்மால் இன்னும் பல பிரபந்தம் பாடிக்கொள்ளலாம் என்பதுட்கொண்டு இக்கைக்கத்தியீந்தோம்' என்னலும், புலவர் வெளிவந்து வணங்கினர். அவ்வருந்தவர், 'முத்திநாதனென்பவன் முன்கொணர்ந்ததொருபுஸ்தகம் மெய்ப்பொருளுயனாரது இறுதிக்கேதுவாயிற்று; நீர்வரைந்த இந்நூல்தானுங்கொலைதவிர்தற்கு ஏதுவாயிற்று' எனவியந்து புலவரைப் பலவாறுபுகழ்ந்து, அப்புலவர் பிரார்த்தனைப்படி அவர்தீவினைக்குப் பரிகாரமும் இயற்றி யருள்புரிந்தார்கள்.

பின்னர், புலவர் கங்கைவீரேசர்சந்நிதியில் தக்கயாகப் பரணியை அரங்கேற்றி, அப்போது தாம் அடிமைப்பட்ட சங்கமக்கூரவராற் பலவரிசைகள் அளிக்கப்பெற்றனராய்த் திரும்பி அரசனவையை யடைந்தனர். அவனெதிர்கொண்டுவந்து 'புலவரே! கொலைப்போர்வழக்கு எவ்வாறாயிற்று' என்று வினவினன். புலவர் "ஆழாக்கு எண்ணெயோடொழிந்தது" என வியப்பிற்கூறி, பரணிபாடியது முதலியசெய்திகளை அறிவித்தலும், அரசனுவந்து அவையோர் மகிழ ஒட்டக்கூத்தரை வியந்துபுகழ்ந்து வரிசைபலவளித்து விடுக்க, புலவர் தம்மனையினெய்தி அந்தணர் வறியவராதியர்க்குத்தான தருமமளித்து முன்போலச் சுற்றத்துடன் சுகமாகக் களித்துவாழ்ந்தனர்.

ஸ்ரீ:

பிரதமவித்தியாப்பியாசப்பிரகடனம்.

(உ௰கூ-ஆம் பக்கத்தொடர்ச்சி)

மேலும், இத்தேசத்தில் மிகவும் இளம்பிராயமான ஐந்துவயதிலேயே அக்ஷராப்பியாசஞ் செய்வித்துப் பிள்ளைகளைப் படிப்பிக்கத்தொடங்குவது வழக்கமாகையால், அவ்வளவு சிறுவயதில் ஆலோசனை செய்யும்படியான வருத்தத்தைப் புத்திக்குக்கொடுக்கலாகாதென்று, சிலவருஷங்கள்வரையில் பாடம்பண்ணும் வழக்கத்தைக்கையாண்டுவருகிறார்கள். கிளிப்பிள்ளைபோல் பாடம் பண்ணுவது புத்திக்குச்சிறிதும் வருத்தமில்லாதகாரியம். இளம்பிராயத்தில் மூளை வளருகிறதாகையால், அப்போது ஆலோசனைசெய்யும்படியான வருத்தத்தைக் கொடுத்து மூளையைக் கஷ்டப்படுத்துவது புத்தியைப்பலவீனமாக்கிவிடுமென்று கண்டறிந்து இக்காலத்துப் பெரியவைத்தியசாஸ்திரிகள் நம்முன்னோர்களுடைய நல்லவழக்கத்தை மேலாகக்கொண்டாடுகிறார்கள்.

நீதிமஞ்சரி எடுபட்டுப்போக, இப்போது அந்த ஸ்தானத்தில் உபயோகமில்லாத பலஅர்த்தபுஸ்தகம், திறவுகோல் முதலானவைகளை நெருட்டுருப்போட நேரிட்டிருக்கிறது. ஏனென்றால், வாசக

புஸ்தகம், இந்துதேசசரித்திரம், சென்னைராஜதானி இவைகளில் சொல்லியவிஷயம் பிள்ளைகளுக்குத்தெளிவாக விளங்கும் பொருட்டுத் தாறுமாறாய் அர்த்தபுஸ்தகங்களெழுதிக் கண்டபடி அச்சிடத் தலைப்பட்டிருக்கிறார்கள். சொற்ப சம்பளத்துக்கு வேலைசெய்யும் உபாத்தியாயர்கள் தாம் படிப்பிக்கச் சோம்பிப் பிள்ளைகள் பரீக்ஷையில் தேறவேண்டுமென்கிற ஓர் எண்ணத்தையே முக்கியமாகக் கொண்டு அந்த அர்த்தபுஸ்தகங்களை வாங்கி வாய்ப்பாடம் பண்ணும்படி பிள்ளைகளை நிர்ப்பந்திக்கிறார்கள். அதனால் அர்த்தபுஸ்தகங்களும் திறவுகோல்களும் பிரதிவருஷமும் பதினாயிரக் கணக்காகச் செலவழியத் தலைப்பட்டிருக்கின்றன. இந்தவிஷயம் டைரெக்டர் அவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்வரையிலெட்டி அவர்கள் இனி இப்படிப்பட்ட புஸ்தகங்களைப் பாடசாலைகளில் வழங்கக்கூடாதென்று உத்தரவு பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும், கீழ்வகுப்பு உபாத்தியாயர்கள் கல்விப்பயிற்சிச் சட்டப்படியே நடப்பவர்களாகையால், தாமே தகுந்த நல்ல புஸ்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்பியாமல் டைரெக்டரவர்களுடைய மறுவுத்தரவை யெதிர்பார்த்திருக்கிறார்கள் போலும்!

தேசபாஷை உறுதிப்படவேண்டுமென்கிறஉத்தேசத்தால்பிரதமவித்தியாப்பியாஸ அடிப்படைப்பாடசாலைகளில் இங்கிலீஷ்படிப்பிக்கக்கூடாதென்று வித்தியாவிசாரணைத்தலைவர் உத்தரவு பண்ணியிருக்கிறார். ஆனாலும், அந்த உத்தரவை அனுசரித்தவர்கள்கூடச் சுதேசபாஷைப் படிப்பை உறுதிப்படுத்துவதற்கு வேண்டியமுறையை அனுசரிக்க டைரெக்ட்டரவர்களது மறுவுத்தரவை இன்னும் எதிர்பார்த்திருப்பார்கள் போலும்!

10-15-வருஷத்திற்குமுன்னே இத்தேசத்துப் பிரதமவித்தியாப்பியாஸ பாடசாலைகளில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலகநீதி, மூதுரை முதலான பாட்டுக்களைப் பதவுரை பொழிப்புரை கருத்துரைகளோடு பூரணமாகப்படித்து வந்தார்கள். பதவுரை முதலானவைகளோடு படித்ததனால் ஸம்பிரதாயமான நல்ல சொற்கள் அநேகம் வாய்ப்பாடமாயிருந்தன. நல்லசொற்கள் அநேகம் வாய்ப்பாடமாவதேயன்றோ வித்பத்தி உண்டாவதற்கு

முதற்காரணம். அக்காலத்தில் வழங்கிவந்த ராஜாங்கத்துவாசகபுஸ்தகங்கள் ராஜாங்கத்துச்சிறந்த பண்டிதர்களால் நல்லசுலபமான தமிழ்நடையில் எழுதப்பட்டு, பாடசாலையில் படிக்கவேண்டிய பாடங்களுடன் வீடுகளில் படிக்கத்தக்க விநோதமான பலகதைகளும் சேர்க்கப்பட்டு, அளவில் அதிகப் பட்டனவாயிருந்தன. இவைகளன்றியும், ஜனவிநோதினி, மகாராணி, ஜந்துவர்த்தமானஸாரம், ஞானபோதினி, விவேகசிந்தாமணி முதலான தமிழ்ப்பத்திரிகைகளிலிருந்து பலவாசகபுஸ்தகங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆகவே இத்தேசத்தில் பிள்ளைகள்படிக்கப் பாடல்களுக்கும் வாசகங்களுக்கும் குறைவில்லையே. ஆனால் நல்ல நடையிலெழுதப்பட்ட இவைகளில் சித்திரப்படங்களில்லையென்றகுறை ஒன்று உண்டு.

இதே விதமாகவே தெலுங்கிலும் வேமனசதகம் சுமதிசதகம் முதலான பத்தியங்கள் பிள்ளைகள் படிக்க விசேஷமாயிருக்கின்றன. ஸ்தோத்திர பாடங்கள் தமிழ் தெலுங்கு ஸம்ஸ்கிருதங்களில் அளவு சங்கியை யில்லாமலிருக்கின்றன. எப்படி ஆங்கிலேய பாஷையில் பைபில் மதபுஸ்தகமா யிருப்பதோடு பாஷையும் விருத்தியாக உபயோகப்படுகிறதோ, அப்படியேதான் இந்த ஸ்தோத்திரபாடங்களும் பயன்படும். ஸ்தோத்திரபாடம் படிப்பதால் பிள்ளைகளுக்கு பயபக்திகள் அதிகமாகி நல்லொழுக்கமுமுண்டாகும். இக்காலத்துச் சிறந்தபடிப்பாளிகளுடைய அபிப்பிராயப்படி படிப்பின் முக்கியமான உத்தேசம் பிள்ளைகளுக்கு நற்குணங்கள் அமைவதேயல்லவா?

கிராமபாடசாலைகளிலே ஆங்கிலேயபாஷையையும் படிப்பிப்பது மிகவும் நலமானது. அது ராஜபாஷையாகையால் எல்லாருக்கும் தெரிந்திருக்கவேண்டுவது மிகவும் அவசியமே. முன்வழங்கிவந்த கார்த்வேயிட்டு 1-2-இங்கிலீஷ் வாசகபுஸ்தகங்கள் ஜர்மன்படிப்புமுறையில் எழுதப்பட்டு இத்தேசத்தில் அதிகமான நன்மையை விளைவித்தன.

16. கற்றது மறவாதிருக்கப் பயிலுதல்.

கற்றதை மறவாதிருக்கப்பயிலுதற்கு, தற்காலப்படிப்புமுறையில் நல்லவழியொன்றுமில்லை. இந்தவிஷயத்தைப்பற்றிப்புராதனக்கிரந

தகர்த்தா ஒருவர் சொல்வதாவது; "தாரணசக்தி, அதாவது ஞாப கம்வைத்துக்கொள்ளும்படியான புத்திநுட்பம் மிகவும் கொண்டா டத்தக்கது. மனது தெளிவாயும் வலியுள்ளதாயும் இருக்கையிலே யே நல்லவைகளும் நெடுநாளைக்கு உபயோகப்படுகின்றவையுமான விஷயங்களை வாய்ப்பாடமாகப் பாடம்பண்ணிவைத்துக்கொள்ள வேண்டும். எத்தனைபேர் தமது தள்ளாத வயதிலே நோயும்பாயுமா யிருந்தபோது தாங்கள் சிறுபிராயத்தில் பாடம்பண்ணின ஸ்தோத் திரபாடம், தியானசுலோகம், கீர்த்தனம், ஞானப்பாட்டு முதலான வைகளைச் சொல்லிக்கொண்டு ஆறுதல் அடைந்திருக்கிறார்கள்" என் பதாம்.

"நான் சிறுவனாயிருக்கும்பொழுது என் தாயார்என்னை நிர்ப்பந் தப்படுத்தி பைபிளில் பெரிய அத்தியாயங்களை மனப்பாடம் பண்ணு வித்தாள். பிறகுநான் பாஷையில் அதிகமாக அபிருசியுடையவனா னதற்குக் காரணம் அப்படிப்பட்ட என்பிரதமசிக்ஷைதான்" என்று ரஸ்கின்துரை சொல்லுகிறார்.

பூர்வத்தில் 1857-ம் வருஷத்திற்கு முன்னே இச்சென்னையிலே ஏற்பட்டிருந்த கலாசாலைப் பாடசாலையில் படித்தவர்கள் பலர் நல்ல பாண்டித்தியமுள்ளவர்களாய்த் தேறினார்களென்பது அநேகர்க்கு நன்றாய்த் தெரிந்த விஷயமே. இக்காலத்துப் படிப்புக்குப்பெரிய தீங்கைவிளைவிப்பதாகிய "குருட்டுப்பாடம்" என்பது அக்காலத்தி லில்லவேயில்லை. வித்தியார்த்திகளில் பலர் கணிதத்தில் விசேஷமான பாண்டித்யம் பெற்றார்கள். ஆங்கிலேய பாஷையிலும் அநேகர் பூர்ணபண்டிதரானார்கள். இதற்குக் காரணம் அவர்களுடைய கற் றதுமறவாத ஞாபகசக்தியே. அதனால் "அவர்கள் தாமகற்ற பாட ங்களிலும் வாசகங்களிலும் பலவாக்கியங்களை நெடுந்தூரம் அப்படி யேஞாபகத்தில் வைத்துக்கொண்டு எழுதினார்கள்" என்று ஆர்பத்னா ட்டு துரையவர்கள் சொல்லியிருக்கிறார். அதேவிதமாக வல்லவோ இக்காலத்துப் பிள்ளைகளும் படித்துத் தேர்ச்சிபெறவேண்டும்.

தற்காலக் கல்விப்பயிற்சி முறைப்படி ஏற்பட்டிருக்கும் பாடங் கள் பலவிதமாகப் பிரயோஜனமில்லாதவையாயும், அவற்றின் அ

மிகவும் சொற்பமாய்த் தூக்கிக்கத்தக்கதாயு மிருக்கின்றன. ஐந்து வருஷகாலம் படித்தபிள்ளை படிப்பதற்குமுன் எந்தஸ்திதியிலிருந்தானோ அதேஸ்திதியிலே தானிருக்கிறான். ஆதலால் இந்த விஷயத்தைச் சீர்திருத்தவேண்டியது மிகவும் அவசியமானது. 'செடியாய் வணங்காதது மரமாய் வணங்காது' என்பதை அறிந்தவர் ஒவ்வொருவரும் இவ்விஷயத்தை மறுக்கமாட்டார்கள்.

17-பிள்ளைகளுக்குப் போதிக்குந்திறமை இல்லாத உபாத்தியாயர்கள்.

தாமே பாடசாலையில் படிக்கவேண்டியவர்களான அரைவாய் கால்வாய்கள் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர்களாக ஏற்படுகிறார்கள். பிரதமவித்தியாப்பியாஸ பரீக்ஷைகொடுத்துத்தேறினவர்களே போதனாப்பியாசபாடசாலையில் ஒருவருஷகாலம்பழகிமறுபடி பிரதமவித்தியாப்பியாஸ பரீக்ஷைக்குப்படிக்கும் பிள்ளைகளுக்கு உபாத்தியாயராக வந்துவிடுகிறார்கள். பிரதமவித்தியாப்பியாஸ பரீக்ஷைகொடுத்தவர்களுடைய பொதுவான வித்பத்தியின்தன்மை இப்படிப்பட்டதென்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அற்பமான யோக்கியதை உள்ளவர்கள் படிப்பித்தோ நமதுசிறுபிள்ளைகள் கம்பனும் காளிதாஸனுமாவார்கள்? உபாத்தியாயர் சொல்வதை ஊற்றமாய்க்கேட்டுக் கிரகிக்கும் திறமையுண்டாகாத சிறுபிள்ளைகள் இப்படிப்பட்ட உபாத்தியாயரிடம்படித்துத் தேர்ச்சியடையாமற் போவது ஓர் ஆச்சரியமன்று.

(இன்னும் வரும்)

சேஷம்பாடி-இராஜகோபாலாசாரியர்.

௪௱௩. தொடைவகை நிலையே யாங்கென மொழிப.

"மாஅத்தாண் மோஒட்டெருமை" இது கூழையளபெடை;எனவரும். இனி மேற்கதுவாயாவது நான்கு சீரினும் இரண்டாஞ்சீரொழிய ஏனையவருவது; அவை "அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள்" இதுமேற்கதுவாய் மோனை. பிறவுமன்ன. கீழ்க்கதுவாயாவது மூன்றாஞ் சீரொழிய ஏனையசீரின் வருவது; "அவிர்மதி யனைய திருநுத லரிவை" இது கீழ்க்கதுவாய்மோனை. பிறவுமன்ன. முற்றுவது நான்குசீருமொத்துவருவது; அது "அயில்வே லனுக்கிய வம்பலைத் தமர்த்த" எ-து. பிறவுமன்ன. அந்தாதித் தொடைக்குதாரணம்:—"உலகுடன் விளங்கு மொளிதிக ழவிர்மதி, மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை, முக்குடை நீழற் பொற்புடையாசனம், மாசனத் திருந்த திருந்தொளி யறிவனை, யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து, துன்னிய மாந்தர தென்ப, பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே" எனவரும். இவ்வகையினான் ஒருபாட்டிறுதி மற்றைப்பாட்டிறுதியாக வந்தாற்கொள்க. இத்துணையுங்கூறப்பட்டன சிறப்புடைய என ஒருநிகராகக்கூறுப. இனி "மீன்றேர்ந்து வருந்திய கருங்கால் வெண்குருகு" இது கடையிணை முரண். இனிப் பின் முரணாவது நாலாஞ்சீரு மிரண்டாஞ்சீரும் ஒன்றத் தொடுப்பது. அது "கொய்ம்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து" எனவரும். கடைக்கூழை முரணாவது முதற்சீரொழித்து மூன்றுசீரும் ஒத்துவருவது. உதாரணம் வந்தவழிக்கண்டு கொள்க. இடைப்புணர்முரணாவது இடையிருசீரும் ஒன்றத்தொடுப்பது. "தேம்படு குறுஞ்சுனை நெடுந்தண் மால்வரை" எனவரும். இனிமோனையெதுகை யியைபு அளபெடையினும் அவ்வழிவருவன வந்தவழிக்கண்டு கொள்க. உயிர்மோனையாவது முதலெழுத்தாகிவந்த உயிரெழுத்து மற்றையடியினும் வருவது; அது " கயலே ருண்கண் கலுழ நாளுஞ், சுடர்புரை திருநுதல் பசலை பாய" எனவரும். எதுகைக்கும் இதுதானேயாம். நெடின்மோனையாவது நெட்டெழுத்து ஒத்துவருவது. "தாமின்புறுவதுலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந் தார்" எனவரும். நெடிலெதுகையாவது "ஆவாவென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார், கூகூவென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்" எனவரும். இனவெதுகைமூன்றுவகை; அவை "தக்கார் தகவில ரென்ப தவரவ, ரெச்சத்தாற் காணப் படும்" இதுவல்லினவெதுகை. "அன்பீனு மார்வ முடைமை யதுவீனு,நண்பென்னு நாடாச் சிறப்பு." இதுமெல்லினவெதுகை. "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப், பொய்யா விளக்கே விளக்கு" இது இடையினவெதுகை. மோனையுமிவ்வாறு வருவன பாகுபடுத்திக்கொள்க. ஆசெதுகையாவது இடையினவொற்றிடை வரத்தொடுப்பது; அது "காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்க

இஃது ஐயமறுக்கின்றது.

இ-ள். சீர்வகையடியின் றொடைப்பகுதி வரையறைப்படாவேனும் அவைசெய்யுட்கணிற்கும் நிலைமை முற்கூறிய கட்டளைபோனின்று தொடைகொள்ளப் பெறுமென்று கூறுவர் புலவர்; எ-று. *

என்றது வரையறையின்றேனுந் தொடைச்சுவைபடுமென்றவாறு. (௱௩)

௱௪ $மாத்திரைமுதலா வடிநிலை காறு

முகி னெற்றி, பூமாண்ட தீன்றேன் றொடைகிறி வருக்கை போழ்ந்து" என வரும். இனி இரண்டடியெதுகையாவது "உலகமூன்று மொருங்குடனேத்துமாண், டிலகமாயதிறலறிவன்னடி, வழுவினெஞ்சொடு வாலிதினூற்றவுந், தொழுவெழல்வினை நீங்குக வென்றியான்" எனவரும். இடையிட்டெதுகையாவது "தோடாரெல்வளை நெகிழ நாளு, நெய்தலுண்கண் பைதலுழப்ப, வாடாப் புலர்புதைஇப் பசலையும், வைகறோறும் பையப் பெருகி, நீடாரலரென் னீர்மனங்கொண்டார், கேளார் கொல்லோ காதலர்தோழீஇ, வாடாப்பவ்வ மறமுகந்தெழிலி, பருவஞ்செய்யாது வலனேர்புவளைஇ, யோடாமலையன் வேலிற், கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே" எனவரும். இவ்வகையினான் மோனைவருவனவுங்கொள்க. பிறதொடையும் இவ்வகையினான் வருவனவுங் கொள்க. மூன்றுமெழுத்தொன்றெதுகையாவது இரண்டாமெழுத்தொன்றாது மூன்றுமெழுத்து முதலொன்றுவது. ஏனையவுமிவ்வாறு உதாரணம் வந்தவழிக்கண்டுகொள்க. இவையெல்லாம் மேலெடுத்தோதப்பட்ட தொடைக்கட்படும் நாற்சீரொழிந்த வடிக்கண்ணும் இப்பாகுபாடெல்லாம்விரிவன வரம்பிலவாகும்." என்பது உரையாசிரியநரை.

* "என்பது தொடைக்குரியதோர் மரபுணர்...ற்று. தொடை நிலைவகை மேற்சொல்லப்பட்ட பாகுபாட்டன எ-று. வேறுவந்துணர்த்து வார்க்கெல்லாமிடனுடைத்து எ-று; அஃதாவது எழுத்தான் வேறுபடுதலும் சொல்லான் வேறுபடுதலும் பொருளான் வேறுபடுதலும் ஆம். இத்துணையுந் தொடை கூறப்பட்டது" என்பது உரையாசிரியநரை.

$ "மாத்திரை முதலாக அடிநிலையளவும் நோக்குதலாகியகருவி நோக்கென்று சொல்லப்படும். காரணமெனினுங் கருவியெனினுமொக்கும். நோக்குதற் காரணமென்பதனை உண்டற்றொழிலென்றாற்போலக் கொள்க: அஃதாவது யாதானும் ஒன்றைத் தொடுக்குங்கால் கருதிய பொருண்முடியுங்காறும் பிறிதுநோக்காது அதுதன்னையே நோக்கி நின்றநிலை. அடிநிலைகாறும் என்றதனான் ஓரடிக்கண்ணும் பலவடிக்கண்ணும் நோக்குதல் கொள்க. அஃது ஒருநோக்காக ஓடுதலும் பலநோக்காக ஓடுதலும் இடையிட்டு நோக்குதலும் என மூன்றுவகைப்படும். உ-ம்." அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட, மறுசிகைநீக்கியுண் டாரும்—வறியராச், சென்றிரப்பரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன், றுண்டாக வைக்கற்பாற்றன்று." இஃது ஒருநோக்காகியோடிற்று. "அறிமினறநெறியஞ்சுமின் கூற்றம், பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம், வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும், பெறுமின் பெரியார்வாய்ச் சொல்" இதுபல நோக்காகிவந்தது. "உலகமுவப்பவலனேர்புதிரிதரு, பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங், கோவற விமைக்குஞ்சேண்விளங் கவிரொளி...... மறுவில் கற்பின் வாணுதல் கணவன், கார்கோண் முகந்த" என்றவழி ஒளி என்பது அதனயற்கிடந்ததனை நோக்காது கணவனை நோக்குதலின் இடையிட்டு நோக்கிற்று. பிறவுமன்ன" என்பது உரையாசிரியநரை.

நோக்குதற் காரண நோக்கெனப்படுமே.

இது நிறுத்தமுறையானே நோக்குணர்த்துகின்றது. இது மேல்நாற் சொல்லாற் செய்யுஞ் செய்யுள் வழக்கியல்பின்வாய் வெள்ளைமைகலந்து நிற் றலாகா தென்பதோரிலக்கணம்.

(இ-ள்) மாத்திரை.........காறும். எ-து. மாத்திரைமுதலிய வுறுப்புக் கொண்ட வடிநிரம்புந்துணையும். நோக்கு.........காரணம். எ-து கேட்டோர் மீண்டுநோக்கிப்பயன்கோடலையுடையவாகச்செய்யுங் கருவியை. நோக்கு... படுமே. எ-துநோக்கென்று பெயர்கூறப்படுமென்றவாறு.

அடி நிறைகாறுமென்றது ஓரடிக்கணன்றிச் செய்யுள் வந்தவடியெத் துணையானும் நின்று முடிகாறும். எ-று.

உ-ம். "முல்லை வைந்நுனைதோன்றவில்லமொடு, பைங்காற்கொன்றை மென்பிணியவிழ, விரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற், பரலவ லடைய விரலைதெறிப்ப, மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக், கருவி வானங் கதழுறை சிதறிக், கார்செய் தன்றே கவின்பெறு கானங், குரங்குளைப் பொ லிந்த கொய்சுவற் புரவி, நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப், பூத்தபொங் கர்த் துணையொடு வதிந்த, தாதுண் பறவை பேதுறலஞ்சி, மணிநா வார்த்த மாண்வினைத் தேர, னுவக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன், கறங்கி சை விழவி னுறந்தைக்குணாது, நெடும்பெருங் குன்றத்தமன்ற காந்தட், போ தவி ழலரினாறு, மாய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே." (அகம்-ச)

வைந்நுனை யென்றதனு லலருந்துணையு மெல்லென்னுது வன்மைய வாய்க் கூரிதாய் நிற்றலினரும்பியணித்தென்பது கூறிற்று. இல்லமுங்கொன் றையும் பிணி யவிழ்ந்தனவென்றது, அவையு மரமாதலிற் கடிதிற்கரியாவா தலிற் கடிதிற்கரிந்த முல்லைக்கு முன்னே மெல்லிய பிணியவிழ்ந்தமை கூ றிற்று. காய்ந்த விரும்பு முறுக்கிவிட்டவழியும் வெப்பமாறுதவாறுபோல நீர் தோய்ந்தும் வெயிலுழந்த வெப்பமின்னுந்தணிந்தில வென்பதுதோன்ற இரும்புதிரித்தன்னமருப்பென்றார். இரலை குழிதோறுந் தெளிந்து நின்ற நீர்க்கு விருந்தினவாதலிற் பலகால் நீர்பருகுதற்குப் பரலையுடைய பள்ளத் தைச்சேர நின்றது என்றதாம். இத்துணையும் பருவந்தொடங்கியதுணையே வற்புறுத்திக் கூறிற்று. புலம்பு முழுவது நீங்கிற்றென்னுது ஒருபுடை தோன்றப்புறக் கொடுத்ததென்றமையின் அதுவும்பருவந்தொடங்கியதுணை யே கூறிற்று. தொகுதியையுடைய மேகங் காற்றின் விசையான் விரைந்த கொடுந்துளியைச் சிதறிற்றெனவே புதுமைகூறிற்று. இத்துணையும் பருவ ந்தொடங்கி யணித்தென்றலின் வற்புறுத்தற்கேலாமை நோக்கிற்று.

கொய்யாத வுளை பெருகுதலுங் கொய்த வுளை பல்காற் கொய்யப் பெருக வேண்டுதலுங் கூறவே குதிரை மனச்செருக்குக் கூறிற்றாம். அதன் கழுத்து வளையும்படி விசித்தவாரொலி நரம்பிற்கு ஓதிய நால்வகைக் குற்றத்தினு மார்ப்பென்னுங் குற்றமெய்திய நரம்போசைபோல விசைப்பவென்க. பூத்தபொங்கரென்பதனாற் பசிப்பிணிதீர நுகரும் பொருளை யதுகுறைவறக் கொடுப்ப வுண்டு மகிழ்ந்து பின்புதாம் நுகராநின்று வதியுமெனவே, யாருமில்லற நிகழ்த்துதற்கு நுகர்தற்குமேற்ற பொருள்களைக் குறைவறப் பெற்றுப் பின்னின்பநுகர்தல்வேண்டுமென்பது கூறினாளாம். பொங்கரிற் பசி தீர்ந்து துணையொடுவதியும் பறவையுந் தாதையுண்கிறபறவையுங் கலக்கமுறுதற்கஞ்சி மணியொலியை வீக்கிய தேரனென்றதனாற் காதலு மருளுமுடைமையின் அவற்றின்பிரிவிற்கும்பசிக்கு மிரங்கினானெனக் கூறவேயவையவற்குநின்கண்ணும் பெருகுமென்றாளாம். வதியும்பறவைவண்டுந் தேனு மென்பதுந் தாதுண்பறவை சுரும்பென்பதும், "எங்குமோடி யிடறுஞ் சுரும்புகாள், வண்டுகாள் மகிழ் தேனினங்காள்." (சிந். குண. சஉ) எனப் பின்னுள்ளோர் கூறியவாற்றானுமுணர்க. இதனாற் சேணிடை வரவையுணர்த்தும் மணியொலியை வாரொலிகேட்கு மணிமைக்கண்ணுங் கேளாயாயினையெனவு மவ் வாரொலி தாதுண்பறவை யொலிக்கணடங்குதலின் கேட்கின்றிலையெனவுங் கூறினாளாயிற்று. வாரொலி நரம்போசை போறலின் பெருவரவாயிற்று. மாண்வினைத்தேரனென்றாள், அவன்றன் கருத்திற்கேற்ப வினைமுடித்தமை தோன்ற; எனவே வன்புறைக்கேதுவாயின தெய்வந்தங்கு மலையாதலிற் றெய்வமணநாறுங் காந்தளினுடைய போதவிழாநின்ற மலர்போல அவர் புணர்ந்தகாலத்துப் புதுமணநாறும் மரிவையெனவே யவர்பிரிந்து சேய்த்தன்றென வன்புறைக்கேதுவாயிற்று. ஆய்தொடி யென்றது, தோண்மெலிந்துழி அயலார்க்குப்புறமறைத்தல் வேண்டிச் செருகுந்தன்மையின்றி யணிந்தநிலையே கிடக்குந்தொடியென்றவாறும். இதுவும்பிரிந்துசேய்த்தன்றென்றவாறதாம். ஈண்டுமாணலமென்றது அவன் பிரிவுணர்த்திய காலத்துப் பிரிவிற்குடம்பட்டாள் போன்றுடம்படாது நின்ற நலத்தை: அது மெய்ப்பாடாம். இங்ஙனம் கோடல்நோக்கென்றுணர்க. (எசு)

BABIES' HEALTH.

is always a matter of deep concern to parents.

If the little one is listless or fretful, and has a poor appetite no time should be lost in giving him

SCOTT'S EMULSION

A few drops added to his milk will make a great change in, baby.

He will become cheerful and bright, and relish his food—a sure sign of health.

NOT TOUCHED BY HAND.

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.,
MANUFACTURING
CHEMISTS,
LONDON, ENGLAND.

Always get the Emulsion with this mark—the Fishman—the mark of the "Scott" process!

CHAMBERLAIN'S COLIC, CHOLERA AND DIARRHOEA REMEDY.

வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, சீதபேதி இவைகளுக்கு

சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த மருந்து.

இதனால்

வயிற்றுவலி, அதிசாரபேதி, சீதபேதி, வாந்திபேதி, வயிற்றுக்கடுப்பு முதலான குடல் நோய்கள் பலவும் ஒழியும்.

இந்த ஆச்சரியமான மருந்து, உலகத்தில் உள்ள மற்ற மருந்துகளைவிட மனுஷகோடிகளுக்கு உதவியாய் நின்று, நோயையும் வேதனையையும் நீக்கி அநேக ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இம்மருந்தை ஒருதரம் குடித்தாலும், எவ்வித கொடிய வயிற்றுவலியும் போய்விடும். பொல்லாத [illegible]திக்கும், மூன்றுதரம் குடித்தால் போதும்; அவ்வளவோடு வேதனை நீங்கும், வியாதியும் ஒழியும். எப்போதும் பலிக்கும் மருந்து, ஒருபோதும் தப்புவதன்று.

இது, மூலிகைகளால் ஆன மருந்து. கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும். சின்ன புட்டி ருபா. 1. பெரிய புட்டி ருபா. 2.